✠

# நீச வாகனம்.

## சேசுநாதர் பட்ட பாடுகளின்பேரில்

## அம்மானை.

2008
Accn.No: 9722
No of Pages: 66

### காப்பு வெண்பா

வஞ்சகயூ தர்செய்த வாதனைக்குள் ளாகித்தண்
மஞ்சுரைக பால மலைதனைக்கே—விஞ்சையதாய்ச்
சென்று மரித்துயிர்த்த சேசு திருச்சரிதை
நன்றுடன்பா டப்பான்றுள் நாட்டு.

### அம்மானை

ஆதி திருச்சுதனார் அம்புவியில் ஏவையுடன்
ஆதன்பிழை தீர்க்கவேதான் அமலமரி தன்னிடமாய்
வந்து பிறந்தமகா வல்லநச ரேசன்பதஞ்
சிந்தையினில் யான்பணிந்து செப்புவே னவர்சரிதை
நீதி செலுத்துகின்ற நித்தியனார் தன்சரிதை
மேதினியோர் தாமறிய விள்வே னிதிற்பிழைகள்
மெத்த விருந்தாலும் மேன்மையுள்ள பெரியோர்கள்
அத்தனையு மேபொறுத்து ஆளுவதுங் கடனைதான்
பார்த்துப் பிழைபொறுக்க பாலன் பணிந்துசொல்லும்
சீர்த்த சரிதைதனை செவியாறக் கேட்பீர்கள்

### ஆதாமேவை சிருஷ்டிப்பு

எல்லையில்லாப் பரமன் எழிலுடைய வல்லமையை
வல்லபரன் தமது மகத்துவத்தை மானிடர்கள்
அறியவே வேணுமென்று அம்பரனார் சித்தம்வைத்து
தெரியவே வேணுமென்று தேவபரன் திட்டமுடன்
வானமொடு சூரியனும் வளர்பிறையும் வையகமும்
மோனபரன் மானிடர்க்காய் முடித்தார் அறுதினத்தில்
மேதக்க பூமியிலோர் மேலான சோலையிலே
ஆதனேவையைப் படைத்து அளித்தார் மிகுவரங்கள்
நாத னவர்களுக்கு நவின்றாரே நல்வரங்கள்
வரங்க ளவர்கள்பெற்று வாழ்கிறதை பேயரசன்
திறமாகப் பார்த்துஅவன் தீரா விசாரமுற்று
எண்ணா விசாரங்கொண்டு ஏங்கியவன் தான்பார்த்து
பண்ணாத யோசனைகள் பண்ணியவ னேதுரைப்பான்

### விலக்கப்பட்ட கனியருந்தல்

முன்னால்நாம் வாழ்ந்திருந்த முடிவில்லா மோக்ஷசெல்வம்
மண்ணாலுண் டானஇழி மனிதர்பெறப் போறார்கள்

பார்க்கிறே னென்றுசொல்லி பலசபதங் கூறியபின்
மூர்க்கமுடன் பாம்புருவாய் மூனந்தோடி யங்கிருக்கும்
மண்ணோர் கெடவளர்ந்த மரமொன்றில் தானேறி
உன்னியோர் கீதமனம் உருகவே பாடலுற்றான்
அன்றதைக் கேட்டிருந்த ஆதித்தா யோடிவந்து
என்னநல்ல பாம்பே இந்தமர மீதேறி
உன்னதமாயப் பாடுவது உற்றவித மென்னவென்றாள்
அப்போது பாம்புமிக ஆனந்தமாய்ச் சிரித்து
செப்புவதும் என்னயான் சேயிழையே உந்தனுக்கு
நல்லதோர் வார்த்தையுண்டு நான்கேட்கிறே னதைமுன்
மெல்லியரே நிச்சயமாய் மிக்க ஒளிக்காமல்
சொன்னால்யான் பாடுறதைச் சொல்லுகிறேன் பின்னாலே
முன்னால்நீ சொன்னாலே முடித்துதரே னென்பாட்டை
நல்லது பாம்பேநீ நாடியெனைக் கேட்கிறதை
(என)சொல்லும்தன் பின்னால்யான் சொல்லுகிறே னுந்தனுக்கு
என்றுசொல்லி யேவையவள் ஏங்கியங்கு நிற்கிறதை
கண்டுமே பாம்புருவாய் காட்டியபேய் சொல்லுகிறான்
இந்தமலர்ச் சோலையிலே இருந்துவாழும் பெண்மயிலே
பைந்துணர்சூழ் சோலையிலே பதிவாழும் பாவையரே
இந்தநற் சோலைசுற்றி இருக்கும் மாக்கனியைச்
சிந்தை மகிழ்ந்திடவே சீராக உண்ணுகிறாய்
மத்தியி லிருக்குமிந்த மாக்கனியைத் தின்னாமல்
ஒத்தி யிருப்பதென்ன ஓதுவாய் என்றானே
அப்போது பேய்சூதை அறியாமல் ஆதித்தாய்
செப்பும் மாத்தடியில் சென்றுபாம்பைப் பார்த்து
எந்தன் மனமுருக இங்கிதமாய் பாடியநல்
விந்தையுள்ள பாம்பேநான் விளம்புவதை நன்றாய்க்கேள்
ஆதி பராபரனார் அம்புவியெலாம் நிறைத்தார்
மேதினியி லெமைப்படைத்து வேணவரந் தந்தவர்பின்
ஓதினோர் வார்த்தை உண்மையுடன் எங்களுக்கு
ஏதொன்று மில்லாமல் சொல்கிறேன் நன்றாய்க்கேள்
இந்தமலர்ச் சோலைதனில் இருக்கு மாக்கனியை
சிந்தை மகிழ்ந்தென்றும் சிட்டர்களே தான்புசிப்பீர்
மத்தியி லிருக்குமிந்த மாக்கனியைத் தின்றாலோ
சத்தியமாய் சாவீர்கள் சாவீர்க ளென்றுரைத்தார்
ஆதலா லிக்கனியை அருந்தாமல் விட்டுவிட்டோம்
தீதுள்ள கனியதனால் தின்னாமல் விட்டுவிட்டோம்
என்றேவாள் சொன்னதைக்கேட் டனஅரவம் நகைத்து
மண்ணுலகி லுங்களைப்போல் மதிகேடர் யாருமில்லை
ஐயோ கடவுள்செய்த அநியாயம் தானறியீர்
மெய்யா யவருமக்கு வெகுசூது செய்தாரே
இக்கனியைத் தின்றாலே இகதேவ ராவீர்கள்
(இது) மெய்பொய் யறியுங்கனி மேலோக தேவராவீர்
என்று கடவுளெண்ணி இச்சூதை செய்தாரே
நன்றாக வுங்களுக்கு நாட்டினா ரிப்பயத்தை
அறியாமல் நீங்களுமே அலைகிறீர் பேதையர்காள்
தெரியாமல் நீங்களுமே திரிகிறீர் பித்தரென்ன
அந்தவுரை யைக்கேட்டு ஆதித்தாய் மதிமயங்கி
எந்தையுரை மீறியவள் இதயம் துணிவுடனே
எந்தனற் பாம்பேநீ இயம்புவது நிச்சயமோ
உன்னுரைப் படியேநான் உண்ணுவேன் கனியையென்றாள்
சொன்னவுடன் பாம்பு சொகுசாய் மாக்கனியை
விண்படர் மாக்கிளையை விரைவாய் வளைத்ததுவே
வளைந்தகிளை தான்பிடித்து வனிதையவ ளப்போது
களைக்காம லதிலிருந்த கனியைப் பரித்ததின்பின்
மாது மனமாற மடிகனியைத் தின்றபின்பு
போதும்நற் பாம்பேநான் போகிறேன் ஆதனிடம்
நல்லது பெண்மயிலே நான்சொன்ன தெல்லாமுன்
இல்லாளுக் குரைத்துகனி யீந்திடுவாய் உந்தனுக்கு
பொல்லாங்கு வாரதில்லை போய்வாராய் கண்மணியே
சள்ளையொன்றும் வாரதில்லை சடுதிநட வென்றதுவே
நல்லதென்று சொல்லி நடந்தாளே கணவனிடம்
உள்ளதைச் சொல்லவேதான் உகந்தாளே கணவனுக்கு
எந்த னருந்துணைவா உந்தனுக் கொருசேதி
கொண்டுவந்தேன் கேட்டாலே கூறுவேன் நன்றாக
என்ன வதுசேதி ஏந்திழையே பெந்தனுக்கு
உன்னித மென்னவது உரைத்திடுவா யெனஆதன்
அப்போது ஏவையள் ஆதாமி னடிபணிந்து
குப்பெனவே பாதங்கள் கும்பிட்டு சொல்லுகிறாள்
என்னருமை நாயகனே எந்தனுடன் விளையாடும்
உன்னித பாம்பெனக்கு உரைத்ததுகேள் நன்றாக
நம்மை படைத்ததெய்வ நாதன் நமக்குமிக
செம்மை வரங்களெல்லாம் சீராய்க் கொடுத்தபின்பு
நடுவிருக்கும் மாக்கனியை நாடியே தின்றாலே
படுகனியை தின்றாலே பாலகரே சாவீரென்று
அன்னவர் நமக்குசொன்ன அறிவெல்லாங் கேட்டிருந்த
உன்னித பாம்பெனக்கு உரைத்ததுபார் மெய்யாக
எப்படி யென்றாலோ (அது) இப்போ தெரிந்ததையா
முற்படி பானுமந்த முதல்வனார் செய்சூது
மத்தியி லிருக்குமந்த மாக்கனியைத் தின்றாலே

புத்தி தெளிந்துஇந்த பூதேவ ராவோமாம்
காதனுக்குச் சரிசமமாய் நாமாகப் போமேமன
சூதாக சொன்னதைப்பார் தோன்றவில்லை யாவுமக்கு
ஆதலா லென்கணவா அடியாள்நான் சொன்னபடி
மேதினியி லேநடந்து மேன்மையுடன் வாழ்ந்திடலாம்
அக்கனியின் மகத்துவத்தை அறிந்துவிட்டோ மாகையினல்
சிக்கின கனிஇதோபார் சீக்கிரம் புசித்திடுவீர்
இந்தகனி ருசிபோல் இருக்குமோ சோலையிலே
எந்தகனியு மிதற்கு இணையாமோ மன்னவனே
ஆதலா லிக்கனியை ஆண்டகையே தின்றிடுவீர்
தீதில்லா விக்கனியை தீவிரமாய்த் தின்னுமென்றாள்
அந்த வுரைகேட்டு ஆதாம் மிகப்பயந்து
எந்தனரு மாதேநீ என்னவேலை செய்தாயடி
அத்த னுரைமீறி அக்கனியை யேன்தின்றாய்
சுத்தனுரை மீறியேன் சூதுகனி தின்றாய்நீ
சாமியவர் வந்தாலே சாப மிடுவாரே
பூமிதனில் நமக்கு போடுவார் சாபமையோ
எந்தனிட பெண்மயிலே எற்கேண்டி யுன்வார்த்தை
அந்த மரக்கனியால் ஆக்கினைகள் வந்துவிடும்
வேண்டாம்வேண் டாமுனக்கு விட்டெறிவா யிக்கனியை
தீண்டாத இக்கனியை தீரமாய் அறிவாயே
இப்படியாய் ஆதாம் இயம்பிடவுங் கேட்டஅவள்
தொப்பெனவே கீழ்விழுந்து கோடுகோ டென்றழுது
இப்போது என்னுயிரை இழந்திடுவே னென்றுசொல்லி
ஒப்பாரி வைத்தழுது ஓடினள் மாய்ந்திடவே
அந்த மொழிகேட்டு ஆதா மிகப்பயந்து
சிந்தை துயர்கொண்டு சீக்கிரமாய் தானேடி
என்னருமை பெண்ணேநீ ஏன்மாயப் போறாயடி
உன்னுரையை மீறவில்லை உகந்துதாராய் பழமெனக்கு
புசித்திடப் பழமெனக்கு பூவையே தாருமென்றான்
உசிதகனி யான்புசிக்க உத்தமியே தாருமென்றான்
அப்படியாய் சொல்லியபின் ஆதித்தாய் கண்டுகொண்டு
இப்படியாய் சொல்லியபின் ஏவையங்கு கொண்டுவந்த
வினைகனியை தான்வாங்கி விரைவாக ஏவையவள்
மனதின்படி யேதின்று மறுத்தார்தேவன் கட்டளையை
ஐயையோ இந்தவிதம் ஆதமேவை செய்ததினல்
செய்யவும் உடல்நாணம் தெரிந்ததுகா ணங்குள்ள
இலைகளை தைத்துதங்கள் இடையிலே கட்டிக்கொண்டு
நிலைதடு மாறிமர நிழலில் பதுங்கினர்கள்



## தேவனின் சாபம்

இத்தன்மை யாயிவர்க ளிருக்குமந்த வேளைதனில்
அத்தனவர் தெரிந்துடனே அதிகவிரை வாகவந்து
ஆதாமே ஆதாமே அருமைமக னேவாராய்
இதோயான் கூப்பிட்டேன் எங்கேயென்றார் மெய்பரனர்
அந்த சத்தங் கேட்டவுடன் ஆதாம் நடுநடுங்கி
எந்தையே உன்முன்வர எனக்குவெட்க மானதையோ
நாதாநீ ரெனக்குதுணை நன்றாய் கொடுத்தவொரு
மாதாலே மோசமுற்றேன் மாநிலத்தில் மாபாவி
ஓதினரே தாமும் உடனேவை தாயெழுந்து
தாதாவே நீர்படைத்த சர்ப்பத்தால் மோசமுற்றேன்
பூமியி லுமதடியாள் புத்திகெட்டேன் பாம்பாலே
கேமிசூழ் பூதலத்தில் நிந்தைகொண்டே னென்றாளே
அந்தவுரை கேட்டவுடன் அங்கொளித் திருந்தவரை
எந்தைபரா னழைத்தவர்க்கு இடுகிறார் சாபமப்போ
இத்தரையில் யான்கொடுத்த இயல்வேதக் கட்டளையை
அத்தன்நான் இட்டமொழி அகற்றின ஆதாமே
இந்தா வுனக்குசாபம் ஈந்தே னிதைவாங்கு
உந்தன்நெற்றி வேர்வைமண்ணில் உதிரவே கஷ்டப்பட்டு
ஆயாச துன்பமதா (லுன்) ஆயுசெல் லாங்குறைந்து
மாயமென மரித்து மண்ணாய்நீ போவாயே
ஏவையே யெந்தனுட எழிலுரையை மீறினதால்
பூவைநீ பிள்ளைபெறும் போதுமகா கஷ்டமுடன்
சோபமுற்று நடுநடுங்கி சொல்லரிய நோயாலே
தாபங்கொண்டு நோயாலே தயங்கி மிகவழுது
செத்துப் பிழைத்திடுவாய் தெரிவையே உனக்குசாபம்
இட்டோ னிதோசாபம் இறந்துபின் மாண்டிடுவாய்
சாகவே சாவீரென்று சாமிசாப மிட்டபின்பு
நாகந் தனையழைத்து நாதனிடு வார்சாபம்
ஓதினர் பாம்பதற்கு உக்ரமுட னப்போது
மாதுஏ வைமதியை மாற்றிகனி தின்னவைத்த
பாதகப் பாம்பேநீ பாரில் நகர்ந்து மண்ணை
தீதுறவே தின்பதல்லால் தெரிவையின் வித்தாக
என்னு மவளுக்குமுன் இனங்களுக்கு மெப்போதும்
மண்ணில் பெரும்பகையை மாறாமல் வைத்திடுவேன்
திண்மையுற நீயவள் குதிக்காலைக் குத்திடுவாய்
கன்னியுன் சிரமதனைக் காலால் நசுக்கிடுவாள்
இந்தப்படி நாதன் இயம்பியபின் சோலையிலே
வந்தவினை தீர்க்க வருவாரே ரக்ஷகனர்

என்றுசொல்லி நாதன் ஏவையுடன் ஆதாமை
நன்றான சோலைவிட்டு நடத்திவிட மனதாகி
சம்மனசை தான்கொண்டு சாடித் துரத்துமென்று
விண்ணகமாய் சேர்ந்து விட்டாரே தற்பரனார்
மனுக்குலத்தை ரட்சிக்க வருடம்நா லாயிரம்பின்
அனுக்கிரக புகழ்வேந்தன் ஐயன் தவிதுகுலம்

## கர்த்தர் ஜனனம்

தன்னில் பிறந்தமகத் தானமரி யன்னையிடம்
உன்னிதமாய் தெய்வம்கரு உற்றகதை கேளுமம்மா
ஆதன் பிறந்த அதே மாதந்தேதி வாரமதில்
நாதன் நரனுருவாய் நாடினது நாயந்தான்
பங்குனி மாதமிரு பத்தைந்து தேதியிலே
துங்கவெள் ளிக்கிழமை சூரியோத யத்தினிலே
சருவேச னிஸ்பிரித்து சாந்துவினால் கன்னிமரி
கருகொண்டு மாதம்பத்தும் கழிந்தபின் பூரணமாய்
பெத்திலே மென்னுமொரு பேர்பெரிய நகர்தனிலே
அத்த னவதரிக்க ஆருமிட மில்லையென்று
சொன்னதினால் வெல்லைமலை தூரத் திருக்குமந்த
உன்னித குகையினிலே உகந்தார் பிறப்பதற்கு
மார்கழிமாத மிருபத்து ஐந்தாந்தேதி ஆதி
வாரம்நடு ஜாமம்பதி னைந்துநாழி கைக்குமேல்
கன்னிமரி அப்பாவக் கஷ்டமொன்று மில்லாமல்
பரவச நிஷ்டைதனில் புஷ்பம் மலர்வதுபோல்
புத்திரன் ஜனித்திருக்க புல்லணையில் தான்கிடத்தி
அமலமரி சூசையரும் அகமகிழ்ச்சி கொண்டிருந்தார்
சம்மனசோர் கூட்டம்து சாசரென வந்திறங்கி
சங்கீதம் பாடியங்கே தான்மகிழ்ச்சி கொண்டிருந்தார்
சோபனங்கள் பாடியங்கே துய்யவனை வாழ்த்திடவும்
ஆயர்கள் வந்துகண்டு அடிபணிந்து நமஸ்கரிக்க
மாமரியும் சூசையரும் மகிழ்ச்சியுடன் தானிருந்தார்
மூவரசர் தோன்றி முதலோனைத் தேடிகண்டு
வணங்கியே முத்தஞ்செய்து வல்லவனை கைகூப்பி
பொன்மீறை தூபந்தனை வைத்து நமஸ்கரித்து
அவரிருக்கும் திசைகளுக்கு அவரவர்க ளேகியபின்
தற்பரனார் கோவிலிலே சம்பிரமமுடன் கொண்டுவந்து
ஏசுவெனுந் திருநாமம் எட்டாநா ளிட்டபின்பு
காணிக்கை யீய்ந்து கவலையுற்றுத் தென்பாகி
சிமியோன் களிகூர்ந்தார் சிறந்த அன்னாள் அகமகிழ்ந்தார்
வாங்கிமுத்தஞ் செய்தார்கள் வளர்பவங்கள் தீர்ந்திடவே



ஏரோதன் சினங்கொண்டு ஏசுவைக் கொலைசெய்ய
எண்ணி யதையறிந்து எஜிப்துக் கேகினரே
அந்த வழிதனிலே அகங்கார பேய்சிலைகள்
அடியோடே தான்விழுந்து அபயமெனக் கூவினவாம்

## பன்னிருவயதிற் காணாதே போதல்

பன்னிரு வயதினிலே பாலனவர் எருசலேம்
பாங்காய்தாய் தந்தையுடன் பரிந்தகோவி லுக்குள்ளே
பணிவுடனே மேசியா பரமனைக்கொண் டாடியபின்
பரிசுத்த வாலயத்தில் பாலகனார் தங்கிவிட்டார்
பிரிந்தார்தாய் தந்தையரை பிதாசித்தம் நிறைவேற்ற
சாஸ்திரிக ளிடமணுகி தற்பரனும் நின்றபின்பு
சுத்தர்களும் கண்டுபரி சுத்தரிவ ரென்றெண்ணி
எழுதினா ரிவர் வரவை எழுநீதி சாரமதை
தாமதஞ்செய் வேளையிலே தாயாரும் சூசையரும்
அருமைசுத னெங்கென்று ஆசையுடன் தேடியப்போ
கண்டார்கள் ஆலயத்தில் கர்த்தன் நசரேசை

## நசரேத்துச் சீவியம்

மகிழ்ச்சியுடன் கூடிவந்தார் மாமரியுஞ் சூசையரும்
வாழ்ந்தார் நசரேத்தனில் வயது வருந்தனையும்
தாழ்ந்தபல வேலைசெய்தார் தாய்தந்தை சொற்படியே
கானாகலிலே யதனில் கதித்தமண வீட்டினிலே
மாதா வருந்திகேட்டாள் மணமகரின் குறையாற்ற
ஆறுகுட நீரைமது வாகஅற்பு தஞ்செய்ய
கண்டு களிகூர்ந்தார் கன்னிமரி யும்பலரும்
நாற்பது நாள்தனையும் ஞாலமதில் கடுந்தபத்தை
நாயகனார் செய்துவென்றார் நயசத்ரு மூவரையும்
கடல்அலையின் மேல்நடந்தார் கர்த்தன் நசரேசர்
முப்பதா மாண்டுதனில் முன்னான்கு சீடர்களை
முறையாகச் சேர்த்து அவர் மொழிந்தார் உபதேசமதை
ஒப்பில்லா அற்புதங்கள் ஊனர் முடவர்கட்கு
ஓயாது செய்துவந்தார் உலகறிய சகலருக்கும்
பெத்தான்யா கிராமமதில் பேர்பெரிய லாசரவன்
செத்தானெனச் சேதிவர சீஷர்களோ டேகினர்காண்
உயிர்கொடுத் தேயெழுப்பி உதவினார் தங்கையர்க்கு
முப்பத்திமூ வாண்டுதனில் முழுபுவியில் மானிடர்க்காய்
திருச்சுதனார் பாடுபட திவ்யபிதா வுத்தாரம்
சுடரிறங்க அவர்மனதில் துய்யபிதா வின்கிருபை
அறிந்தார் சுதனார் ஆண்டவனார் வாசகத்தை

பாவிக ளுக்காக பாடுபட வேணுமம்மா
ஆண்டவளே யெந்தனுக்கு ஆதிபிதா வுத்தாரம்
போகவேணு மம்மாயென் புத்தியுள்ள தாயாரே
உத்தாரம் தாரும் உயர்ந்தகன்னி மாமரியே
என்று நசரேசர் எழில்தாயைக் கேட்டுநின்றார்
அந்தமொழிகேட்டு ஆண்டவளு மேதுரைப்பாள்
பாருலகில் மானிடர்க்காய் பாடுபடப் போறேமென்றீர்
உத்தாரம் தாருமென்றீர் உயர்ந்தகுரு வென்னேசு
வையகத்தில் மானிடர்க்காய் மரித்து உயிர்த்துசென்றால்
எந்தனுக்கு இவ்வுலகில் எவருதவி யென்மகனே
என்று மாதாகேட்க ஏசுநச ரேயகுரு
வாக்குத் திறவாமல் மறுமொழிகள் கூறாமல்
வல்லபரன் சித்தமதை மகிழ்வுட னேற்கவேண்டும்
அந்த மொழிகேட்டு அன்னைகன்னி மாமரியும்
துக்க மிகவானாள் துன்பக்கட லில்வீழ்ந்தாள்

## ஜெருசலை நகர்ப் பிரவேசம்

பனிரெண்டு சீஷரையும் பாங்காக தானழைத்து
வாருங்கள் சீஷர்களே வாணகரிப் பட்டணத்தில்
சேருங்கள் சீஷர்களே ஜெருசலேம் போவதற்கு
எழுந்தருளி போவோமங்கே என்னுடைய சீஷர்களே
ஏகபிதா தன்னருளால் எழுந்தருளி பாடுபட
இப்புவியில் மானிடர்க்காய் எண்ணில்லாப் பாடுபட
என்றுசொல்லி தானடந்தார் ஏசு நசரேயர்
நிச்சய மாகச்சொல்லி நீசநல்ல வாகனமேல்
தாழ்ச்சியுடன் தானடைந்தார் தர்மமரி பாலகனார்
கோவேறு கழுதையொடு குட்டியொன் றங்கிருக்க
குட்டியையும் கழுதையையும் கொண்டுவந்தா ராண்டவர்க்கு
கர்த்த னுரைபடியே கழுதையைக் கொண்டுவந்தார்
கழுதையின்மேல் வஸ்திரத்தை கனமாய் விரித்தார்கள்
சீயோன் குமாரியரே (உன்) செல்வ மகாராஜனவர்
கத்தபா ரூடரெனக் காண்பாரென் றேயிருக்கும்
வேதத்தின் வாக்கியம் வெகுவாய் விளங்கிடவே
இதுவரையில் யாதொருத்தர் ஏறிச் சவாரிசெய்ய
புதிய கழுதையாம் புகலும்சுத்த வாகனமாம்
வேசரியின் மேலேநம் வேந்தன் எழுந்தருளி
(அந்த) பட்டணத்துக் குள்ளே பரமசுதன் போகையிலே
ஜெருசலேம் பட்டணத்தார் சேசுவைத் தான்பார்த்து
ஆரிவர் என்றுசொல்லி அவர்கள்மிக கேட்கலுற்றார்
நசரேசு நாதரென்று நல்சீஷர் தானுரைக்க



பட்டணத்து குடிஜனங்கள் பாங்காக கண்டார்கள்
தோரணங்கள் கட்டி துலங்குகொடி தான்நிறுத்தி
பாடினார் சோபனங்கள் பலஜாதி யானவர்கள்
ஓசன்னா வென்று உயர்வாகக் கூவினர்கள்
குருத்தோலை கைப்பிடித்து கொச்சரித்தார் பாலர்களும்
ஒலிவ மாக்கிளைகள் ஒவ்வொரு வரும்பிடித்தார்
கூவியே நிச்சயித்தார் கொடுயூத பட்டணத்தார்
(இந்த) மானிடரைப் பார்த்து வல்லசுத னப்போது
வரப்போகும் ஆக்கினைக்கு மகத்தான கஸ்தியுடன்
திருவுளம் பற்றியே தேவரீர் தானடந்தார்
வந்த ஜனங்களுக்கு வாகுடனுப தேசஞ்செய்தார்

## இராப்போசனம்

திருநாள் பாங்குதனை சேசுஅவர் ஆசரிக்க
திவ்விய பட்டணத்தில் புசிக்க இடங்கேட்டு
வாருமென்று தானுரைத்தார் வல்லோன் ராயப்பருக்கு
உத்தரவு பண்ணி யுடனே யனுப்பிவைத்தார்
அந்த மொழிகேட்ட அப்போஸ்தல ராயப்பர்
ஜெருசலையாம் பட்டணத்தில் சினயூதர் பொல்லாதோர்
வன்கொடுமைக் காரர் மனவிரக்க மில்லாதோர்
குடியிருக்கும் மாளிகையை கொடுப்பாரோ உந்தனுக்கு
அங்கே இடங்கேட்டீர் அஞ்சுகிறேன் ஆண்டவனே
அந்த மொழிகேட்ட ஆண்டவரு மேதுரைப்பார்
பட்டணத்து குடிதனிலே பாங்காய் நமக்கு இடம்
தர்ம குணமுடையான் தான்முகித்தான் மாளிகையும்
மாளிகையும் தான்முகித்து வருவான் குளத்தருகே
அவனை யிடங்கேட்க அன்பாக காட்டிடுவான்
நல்லது சுவாமியென்று நட்பான பேதுருவும்
ஆண்டவனார் தானுரைத்த அரிய குளத்தருகே
வந்துநின்றான் குணமுடையான் வர்ணகுடம் கைபிடித்து
கண்டுமிக பேதுருவும் கடுகெனவே தானழைத்தார்
ஏனழைத்தீ ரென்று அவன் இரக்கமாய் கேட்கலுற்றான்
அந்து மொழிகேட்டு அப்போஸ்தல ராயப்பரும்
நல்ல திருச்சுதனார் நசரே செழுந்தருளி
வருகிறா ரிங்கே வாணகரிப் பட்டணத்தில்
உன்னை யிடங்கேட்க உகந்தெனை யனுப்பிவைத்தார்
(என) அந்த மொழிகேட்டு ஆசார மாகவேதான்
ஐயாவே யானும் ஆண்டவர்க்கென் றேநாடி
அநேகநா ளூழியங்கள் அடியேன்நான் செய்துமிக
கட்டி முடித்துவைத்தேன் கனமான மாளிகையும்

இன்று முகித்துநான் இங்குவந்தே னென்றுரைத்தான்
ஆண்டவரை மாளிகைக்கு அழைத்துவாரு மென்றுரைத்தான்
கூட்டி வாரும்என்று கூறினான் குணவானும்
நிச்சயத்தைக் கேட்டுக்கொண்டு நேசமுள்ள ராயப்பரும்
அக்ஷணமே ஓடிவந்து ஆண்டவர்க்கங் கேதுரைப்பார்
(என்) ஆண்டவரே நீருரைத்த அழகு குளத்தருகே
வந்துநின்றான் குணமுடையான் வர்ணகுடங் கைபிடித்து
கண்டுநான் கேட்டேன் கனபெரிய மாளிகையும்
(அவன்) இன்று முகித்தேதான் இங்குவந்தே னென்றுரைத்தான்
அழைத்து வாருமென்று அறிக்கையிட்டான் எந்தனுக்கு
கூட்டி வாருமென்று கூறினான் குணமுடையான்
நிச்சயமாய்க் கேட்டுவந்தேன் நீதியுள்ள ஆண்டவரே
என்றுசொல்லி பேதுருவும் எழில்பாதம் தெண்டனிட்டார்
நல்லது தம்பியரே நாம்போவோமென்றுசொல்லி
எழுந்தருளி தானடைந்தார் ஏகமரி புத்திரனார்
(அப்போ) ஆண்டவரைக் கண்டு அடிபணிந்து தோத்திரித்து
ஆண்டவரை மாளிகைக்கு அழைத்துப்போய் விட்டானும்
பாரோன் சிறையினின்று பரமபிதா மீட்டதற்காய்
பாரினிலே யூதரவர் பாஸ்காவை யாசரித்தார்
அந்த வருடந்தனில் ஆண்டவரும் பாஸ்குதனை
ஆரபா ரத்துடனே அனுசரித்தா ரத்தினமே
அசன மருந்தியபின் அன்பாக பேசலுற்றார்
நேச மக்களேவெகு நாளாயெதிர் பார்த்ததினம்
வந்ததா லுங்களுக்கு வசனிப்போம் ரகசியத்தை
உங்களோ டேயிருந்து ஊழியுள்ள காலம்வரை
தங்கி யிருக்கவேநாம் தாரணியில் மனங்கொண்டோம்
ஏங்கி யழவேண்டாம் எந்தனுட சீஷர்களே
தாங்கியே யாதரிக்க தாரணியில் மனங்கொண்டோம்
திராட்ச பாத்திரங்கோ துமையப்பந் தானெடுத்து
வல்லபிதா வானவரை வணங்கியே நமஸ்கரித்து
பூசையுந் தான்செய்தார் புகழ்பெரிய சாலைதனில்
வைத்தாரே பூசைதனை வையங்க ளீடேற
போட்டாரே பூசைதனை பூவோர்க ளீடேற
பூசையிலே தம்மை பூரணமாய் சீஷர்கட்கு
நேசமாகத் தந்தார் நித்திய ஜீவனைத்தான்
கோதுமை யப்பமதில் குருபரனார் தான்மறைந்தார்
இங்கிருந்த சீஷர்களும் அருண்டு நடுநடுங்கி
அப்போது பூசைசெய்து இருந்த குருபரனார்
தற்பரனார் எங்கேயென்று தான்சீஷர் தேடிமிக
ஏங்கி முகம்வாடி யிருக்குமந்த வேளையிலே



சிந்தை தெளியவப்போ சீஷர்முன்னே வந்துநின்றார்
இந்த பிரகாரமதாய் எழுந்தருளி யப்பமதில்
எப்போதும் நாமிருப்போம் என்னுடைய சீஷர்களே
பூவோர் பவம்போக்க பூசைதனை செய்யுங்கள்

## சீஷரின் பாதங் கழுவுதல்

பாரினிலே பிரதிதினம் பரமனுட மனங்கரைய
(பின்) வாருங்கள் சீஷர்களே வணங்கியே யுங்களது
பாதங் கழுவியபின் பாங்காக முத்தமிட
ஒன்றுபட நில்லுமென்று உற்றபரன் றானுரைத்தார்
அந்த மொழிகேட்டு அன்பான ராயப்பரும்
ஆண்டவரே யெங்கள் அருமையுள்ள சற்குருவே
(எங்கள்) பாதங் கழுவுதற்கு பாத்திரமோ நாங்களென்றார்
ஏது ராயப்பாநீ என்வார்த்தை மீறுகிறாய்
வானலோக மோட்ச வளமைபெற மாட்டாய்நீ
எந்தன் மொழிக்கு எதிர்மொழி பேசவேண்டாம்
அந்தமொழிகேட்டு அப்போஸ்தல ராயப்பரும்
ஆனால் திருப்பரனே (என்) அங்கமெலாம் நீர்கழுவும்
என்றுமிக சீஷர்களும் எழுந்துமே நின்றார்கள்
முப்பொருளு மொன்றான முதலோனுமப்போது
பாதங் கழுவியேதான் பனிரெண்டு சீஷருக்கும்
துப்பறவாய் தான்துடைத்து துய்யபரன் முத்தஞ்செய்து
அனைவருந் தாட்சியைத்தான் ஆசரிக்க வேண்டுமென்றார்
எனது பிரியமக்களே எந்தன்புது கட்டளையாம்
ஒருவ ரொருவர்மீது ஒப்பில்லா பட்சம்வைத்து
எம்பொருட்டு நேசியுங்கள் என்றார்நம தாண்டவனார்
சொல்லியபின் கஸ்தியுடன் சீஷர்களை தான் பார்த்து
உங்களி லேயொருவன் உலகறிய இன்றிரவு
ஈனவர்ம யூதர்கட்கு எம்மைக்காட் டிக்கொடுப்பான்
அப்போது சீஷர்களும் அச்சத்தோ டேநடுங்கி
நாங்களோ சுவாமியென்று நாலுபேர் கேட்கலுற்றார்
தோய்ந்தவப்பம் நாம்தருவோம் துரோகி அவன் காண்பீரே
துய்த்தான் யூதாஸவனும் துன்மனசுக் காளானான்
பாசபசா சவனுட்புகுந்தான் பரமனார் அதைக்கண்டு [னார்
மோசக்கருத்துக்கொண்டாய் (யூதாஸ்) முடிக்கப்போவென்று சொன்
(அப்போ) காசுவைத் திருந்தவவன் கடுகெனவே நடந்திட்டான்
காட்டிக் கொடுப்பவனுக்கு (ஐயோ) கனகேடு வுண்டாகும்
அன்பான ராயப்பா அறிவாயிவ் விராத்திரியே
அட்டியில்லாது மூன்றுமுறை அங்கே மறுதலிப்பாய்
சேவலொன்று கூவிடுந்தான் சொன்னேன் மிதுபொய்யோ

செத்தாலு மறுதலியேன் (என்று) செப்பினார் ராயப்பர்
ஆண்டவரை விட்டு அகன்ற யூதாசன்
அகங்கார வன்மகுண அசடரிடந் தான் சேர்ந்தான்
சூது கடைகளையுந் துரோகிமிக தான்பார்த்து
ஆண்டவனார் பொருள்கொள்ள அளித்துவைத்த காசையெல்லாம்
சூதாடி தான்தோற்றான் சொல்புரட்டு பாதகனும்
வேறு முகமானான் வினையூதர் பட்டணத்தில்
இசைவுகொள்ள வில்லாமல் ஏங்கியே கைமுறித்து
வல்ல குருவுடனே வகைசொல்ல ஏதுவின்றி
வாய்வறண்டு கண்கலங்கி வருகுமந்த வேளையிலே

## யூதாஸ் காரியோத்தால் காட்டிக் கொடுக்கப்படல்

வஞ்சனைக் காரர்மிக வனுயூதர் தான்றிரளாய்
அஞ்சாம லாண்டவரை அவர்கள் மிகப்பிடிக்க
ஆலோசனை களைப்பேசி யவர்கள்வெகு கூட்டமதாய்
வஞ்சனைகள் தீய மனங்கொண் டிருக்கையிலே
பாதகன் ஸ்காரியோத்தும் (அந்த) பாதைவழி போகவப்போ
நீயா ரெவரென்று நேர்ந்தவர்கள் கேட்கலுற்றார்
அந்த வுரைகேட்டு அந்நீச பாதகனும்
நசரேசு தன்சீஷன் நானெனவே தானுரைத்தான்
அந்த மொழிகேட்டு அவர்கள்மிக வப்போது
சொல்லுமிவன் பிறகாலே சீக்கிரஞ்செல் வோமானால்
கண்டு நசரேசை கடுகெனவே தான்பிடிப்போம்
என்றுமிகத் தான்பேசி இருக்குமந்த நேரமதில்
பஞ்சமாப் பாவிபாதகனும் போயுரைப்பான்
என்னத்திற் காய்நீங்கள் என்னைக் கேட்டீரென்ன
நசரேசைத் தேடியேதான் நாங்கள் பிடிக்கவந்தோம்
நாங்கள் பிடிப்பதற்கு நல்லவழி காணோமென்றார்
அந்தமொழி கேட்டு அநியாயப் பாதகனும்
(நீங்கள்) முப்பத்தி மூன்று முதிர்வெள்ளி காசையுமே
எண்ணி கொடுத்தீரானால் என் குருவை யுங்களுக்கு
காட்டிக்கொடுப்பேனான் கடுகெனவே யிக்கணத்தில்
சுட்டியே காண்பிப்பேன் துரிதமுட னென்றானே
பகர்ந்த மொழிகேட்டு பாதகராம் யூதர்ஜனம்
சந்தோஷப் பட்டார்கள் தற்பரனைத் தான்பிடிக்க
(நீ) சொன்னபடிக்கு சொக்கவெள்ளி காசையுமே
எண்ணியே நாந்தருவோம் எங்கள்தெய்வந் தன்னாணை
தப்பாமல் நாங்கொடுப்போம் சற்குருவின் மேலாணை
உங்களழகுடனே உங்குருவின் தன்னழகும்
அச்சுப் பதித்தாப்போல் அழகுமிகக் காணுதப்பா



வந்துநாங்க ளுன்பிறகே வளைந்துமிக சூழ்ந்துகொண்டு
(உங்கள்) காரண சற்குருவை கைகாட்டி நீயளித்தால்
ஆரென நசரேசை யறிந்துபிடிப் போமென்றார்
சாற்றிய வுரைகேட்டு சண்டாளப் பாதகனும்
(நான்) வேறே யொருமொழிதான் விளம்புகிறேன் கேளுங்கள்
ஊருக்கு மேற்கே உயர்ந்ததொரு பூங்காவில்
ஜெத்செமன் தோட்டமென்னும் கீர்த்திபெற்ற பூங்காவில்
இருந்து செபம் புரிவார் என் குருவுஞ் சீஷர்களும்
(அப்போது) நல்லநடு ஜாமமதில் நாடி வளைந்தாக்கால்
(நான்) ஓடியே தான்தழுவி உயர்ந்தவெங்கள் நசரேசை
கட்டிமுத்தஞ் செய்தங்கே காட்டிக் கொடுப்பேனென்றான்
நல்லதென்று சொல்லி நவில்யூதர் காசையெண்ணி
கொடுத்தாரே யூதர்களும் குத்திரனின் கைதனிலே
(அவன்) வாங்கிக்கொண்டு காசை வலதுகையுந் தான்போட்டு
என்குருவை யுங்களுக்கு யிக்கணமே பூங்காவில்
ஒப்பிப்பே னென்று வுண்மைசொல்லி யூதருக்கு
வந்து யிசைவுகொண்டு வெகுநேர மாச்சுதென்று
சிந்தையில் எண்ணியேதான் சீக்கிரமாய் வந்தானும்

## பூங்காவனத்தில் செபம்

பாவிகளை மீட்கவென்று பரம திருச்சுதனார்
ஏகியே பூங்காவில் ஏககிரு பாகரனார்
செப்பரிய பூங்காவில் செல்வதற்கங் கேதுசொல்வார்
வாருங்கள் சீஷர்களே (என்) மாபிரிய மானவரே
இயம்புவேன் தம்பியரே யின்றிரவு யூதர்கையில்
அகப்படப் போகிறேம்நாம் அன்புள்ள சீஷர்களே
பத்தியுடன் நீங்களுந்தான் பரமன்சந்நி தானமதில்
சற்று விழித்திருந்து செபம்புரிய வேண்டுமென்றார்
நசரேசு தானுரைத்து நடந்தார் குகையருகே
(ஒரு) கல்லெறி தூரம்போய் காரணனை வேண்டலுற்றார்
நித்திரை யால்சூழ்ந்து நினைவுதப்பி சீஷர்களும்
புத்தி மிகமயங்கி போகுமந்த வேளையிலே
வந்து திருச்சுதனார் வாய்திறந்து ஏதுரைப்பார்
நீங்கள் விழித்திருந்து நித்திரைகள் செய்யாமல்
மணிநேரம் என்னோடு மன்றாடலாகாதோ
ஜெபம்புரிவீ ருங்களுக்கு தீங்குகளே வாராது
என்றுமே தானுரைத்தார் இன்பமுள்ள சீஷருக்கு
தமது பிதாவையங்கே தான்தாண்டி மறுமுறையும்
உருக்க ஜெபம்புரிந்தார் உத்தம ஏசுபிரான்
வருகிறதே யுத்தாரம் வானபரன் சொற்படிக்கு

எந்தைபரன் ஜெபம்புரிந்து இருக்குமந்த வேளையிலே
அப்போது வந்தார்கள் அரும்பாவி யூதர்களும்
முள்முடி சங்கிலியும் மூங்கிற்றடி நெரிசமும்
வர்ணப் பிரம்புகளும் வரிகயிறு சங்கிலியும்
கட்டக் கயிறுகளும் கசைபிரம்பு வாருகளும்
தம்பட்டம் வல்லறியும் தவில் முரசு தாரைகளும்
தண்டு தடிகளுடன் சொல்லவொண்ணா ஆயுதமும்
கருமேகம் போல கனயூதர் வாரார்கள்
செம் மேகம்போல சேர்ந்துமே வாரார்கள்
வந்துமுன் பாகவந்த வனத்தில் விழுந்ததையும்
கண்டு திருச்சுதனார் கடுமூச்சு விட்டுநின்றார்
ஆவி மிகசோர்ந்து ஆண்டவருந் தான்விழுந்து
தேவபிதா வைநோக்கி தீர்க்க ஜெபம்புரிந்தார்
(அப்போ) வந்துமிக வானவர்கள் வல்லபரன் தூதுகொண்டு
இறங்கி திடனுரைக்க ஏகசுத னப்போது
தந்தையே யிந்தக் கசப்பான பாத்திரமே
சித்தமா னாலெடுமுன் சித்தப் படியாக
இரக்கமுட னுத்தரிப்பேன் இத்தரணி மானிடர்க்காய்
தப்பாமல் உத்தரிப்பேன் தரணி பவமொழிய
என்று பரனுரைக்க ஏகிவிட்டா ரும்பர்களும்

## கர்த்தர் பிடிபடல்.

வாருங்கள் சீஷர்களே (என்) மாபிரிய மானவரே
(நம்மை) வளைந்து பிடிக்கவந்த வலுயூதர் முன்பாக
எதிராக போகவேணும் என்னுடைய சீஷர்களே
ஜெத்செமனே தோட்டம்விட்டு திரும்புமவ் வேளைதனில்
எழுந்திருங்க ளென்றுசொல்லி ஏசுபரன் றானுரைத்து
வழிபார்த்துக் கொண்டிருந்த வலுயூத ரானவர்கள்
ஆயுதங்கள் கொண்டு அதிர்வெடிகள் தானெழுப்பி
வீரியங்கள் பேசி வெகுவாய் சமர்த்துடனே
துப்பாக்கி வாணங்கள் தொடர்ந்த படைகளுடன்
அம்பு வில்லுக்காரர் அவர்கள் சிலபடையும்
சாட்டை சவுக்குகளும் சக்கரமுந் தோமரமும்
தம்பட்டம் மல்லாரி தவில்முரசு பேரிகையும்
மத்தாப்பு தீவட்டி மகத்தான தீபமுடன்
வந்து படைகூட்டி வலுயூதர் தான்றிரளாய்
அடர்ந்து வனத்தைச்சுற்றி அவர்கள்மிக வப்போது
அதிர வெடியெழுப்பி ஆக்ரமித்து வந்தார்கள்
கொம்புக ளூதியல்லோ கூவி பறைமுழக்கி
மத்தாப்புத் தீபம் வனத்தில் பகல்போல



வருகிறதைக் கண்டு வஞ்சயூதாஸ் காரியோத்தும்
உகந்துநம தாண்டவரை யோடியே தான்றழுவி
கட்டி முத்தஞ்செய்து காட்டிக் கொடுக்கலுற்றான்
அப்போது யூதஜனம் ஆண்டவரை தான்பிடிக்க
சீஷர்கள் தான்பார்த்து சிந்தை கலங்கினரே
பொல்லாத யூதர்களும் பொத்தென்று விழுந்ததினால்
ஆசீருந் தான்வதித்தார் அவர்க ளெழுந்துநின்றார்
எழுந்திருந்த பின்புநல்ல ஏசுபரன் யூதர்களே
எங்குவந்தீர் தம்பிகளே என்றுபரன் தான்கேட்க
நசரேசை தேடியேதான் நாங்கள்வந்தோ மென்றுரைத்தார்
(அப்போ) நாம்தான் நசரேசு நாடிப் பிடியுமென்றார்
ஏனோ திகைக்கின்றீர் என்னைப் பிடியுமென்றார்
அந்த மொழிகேட்டு அநியாயப் பாதகரும்
வளைந்துமிக வப்போது வன்புலிபோ லேசினந்து
தீண்டினார் பாதகரும் தேவன் றிருக்கரத்தை
சிங்கமத யானையைப்போல் சீறியே மேல்விழுந்து
பிடித்துமே கட்டினார் பெருமான் றிருக்கரத்தை
கரங்களைக் கட்டி கைப்பிரம்பால் தானடித்தார்
(அப்போது) அப்போஸ்தல ராயப்பரும் ஆக்ரமித்து வாளுருவி
வீசினார் கூட்டமதில் வீரன்மால்கூஸ் காதறவே
தரையில் விழுந்திடவும் தான்பார்த்து யூதர்களும்
அருண்டு நடுநடுங்கி அப்போதே யூதரெல்லாம்
வெருண்டு ஒடுங்கிநின்றார் மால்கூசும் தன்படையும்
ஆண்டவனா ரப்போ ராயப்பரை தான்பார்த்து
ஏதுநீ ராயப்பா என்வார்த்தை மீறுகிறாய்
ஓங்கிய வுன்வாளை உரைதனிலே போடுமென்றார்
ஆண்டவனார் பின்புகா தறுபட்ட மால்கூசை
ஆசீர் வதித்துசெவி யானதை பொருத்தியபின்
பதுங்கிருந்த யூதர் படைகள் மிகத்திரண்டு
பிடித்தார்க ளப்போ பேரிகையுந் தான்முழங்க
கண்டிருந்த சீஷரெல்லாம் கலகலத்து மெய்மறந்து
கைவிட்டோடி போனார்கள் கர்த்தனேசு நாதருந்தாம்
கட்டக் கரங்கொடுத்தார் கன்னிமரி பாலகனார்

## கைப்பாஸ் ஏரோது ஆனாசண்டை அழைத்துப் போகல்.

கருமேகம் போல்யூதர் கவிழ்ந்து பிடித்தார்கள்
அப்போது ஆண்டவரை அநியாய யூதர்களும்
இராக்கினியால் தான்வளர்த்த ரக்ஷகரின் கூந்தலையே
குலையப் பிடித்திழுத்து கொலைக்கார ரப்போது
ஈட்டிப் பிடங்கடியும் இனியில்லா வாரடியும்

கைப்பிரம்பு சாட்டையொடு கசைகளால் தானடித்தார்
தலையாங் கயிற்றாலே சங்கிலியாற் றானிறுத்தி
பின்னுமுன்னு மாகத்தள்ளி பிகிந்து இருகரமும்
கட்டி யிறுக்கியேதான் கானகத்தை விட்டகற்றி
நல்ல வனத்தைவிட்டு நடத்தினார் யூதர்களும்
தூசிமிகப்படிந்து துய்யமுகம் வேறாகி
புழுதி மிகவடைந்து பொன்முகமும் வேறாகி
பாருலகி லாண்டவரும் பயித்தியக் காரனைப்போல்
நாண யிழுத்துகட்டி நடவென்றார் யூதர்களும்
எட்டியடி வைத்தாரே யேகமரி புத்திரனார்
தூக்கியடி வைத்தாரே துய்யமரி பாலகனார்
தாங்கியடி வைத்தாரே தர்மமரி தன்சுதனார்
சுற்றி வருவார்கள் துப்பாக்கி பாணமுடன்
பக்கம் வருவோர்கள் பரனை நிஷ்டூரனென்பார்
பின்னே வருவோர்கள் பெருமீட்டி நேரிசமும்
உருவிய வாள்காரர் ஓங்கியே முன்னடக்க
போர்க்கோலம் போலே போகிறார் யூதர்களும்
சேர்த்து பிடித்திழுத்து சீக்கிரமாய் தானடந்தார்
செதிரோன் பாலமதில் சேசுநாதர் கால்சறுக்கி
விழுந்தார் பலமாக வினையூதர் தானிழுத்தார்
எழுந்திருந்த பின்பு எம்பரனை யூதர்களும்
நடவென வேதள்ளி (என்) நாதனை யடித்தார்கள்
சமர்த்தா யடித்தார்கள் தாய்மரியாள் தன்மகனை
சாய்ந்தே யடித்தார்கள் தற்பரனை யப்போது
கொண்டுசென்றா ரந்நேரம் கொடூரமுடன் யூதர்களும்
நிஷ்டூர யூதர்களும் நெடுநேர மாச்சுதென்று
கூவியே கொக்கரித்து கொடியோன் கைப்பாசிடமாய்
அழைத்துக்கொண்டு போனார்கள் அவனுடைய வரண்மனைக்கு
கொண்டுபோய் விட்டார்கள் கோதில்லாக் கர்த்தனையும்
(அவன்) உருட்டி விழியாலே ஊடுருவத் தான்பார்த்து
வானுலக மெங்கும் வையகமு மொருகுடையில்
தானாள வந்தவொரு தற்பரனார் நீதானா?
பொன் னுலகமெங்கும் புகழ்ந்து பணிசெய்தேவ
வல்ல குமாரனென்று வந்தவனும் நீதானா?
சொல்லடா வென்றுரைத்தான் சூதுள்ள கைப்பாசன்
(அப்போ) வல்ல திருச்சுதனார் வாய்த்திறந்து ஏதுரைப்பார்
பொய்கால மேவளரும் பெரும்பாவத்தால் கெட்டவரை
புத்தியுஞ் சொல்லியிப்போ பொதுநடுத் தீர்வையிலே
என்வார்த்தை மீறி யிகழ்ந்து நடப்போரை
வன்னி நரகதினில் வாய்விட்டலறிடவே



தள்ளுவோம் நாமே (இது) தப்பாது சத்தியமே
என்றமொழி கேட்டவனும் இருதயம் பொங்கியதால்
ஆகாத பாவியவன் ஆனாசு என்பவனும்
கண்டீரோ மன்னவரே கள்ளனிவன் பேசினதை
பேசு மனிதனிவன் பேருலகில் தெய்வமென்று
சொல்லியே தான்திரிந்தான் துரோகியிவ னுலகமெல்லாம்
என்றுமே சொல்லியவன் இட்டிருந்த சட்டைதனை
சீறியே தான் கிழித்தான் சின்னபின்ன மாகவேதான்
அதட்டியவ னுக்ரமித்து ஆண்டவரை கேட்கலுற்றான்
இப்புவியில் ராஜாங்க மெங்களுட தெய்வமென்ப
தல்லவென்றுசொல்லி மிக்கருவ மேதுனக்கு
வீரியங்கள் சொன்னவனை வீசடா சாட்டையினால்
என்றவுடன் சேவகர்கள் எழுந்துமிக ஆண்டவரை
அங்கந் தெறித்துவிழ அடித்தார்கள் தங்கள்கையால்

## இராயப்பர் ஆண்டவரை மறுதலித்தல்

பெரிய சீஷனாகும் பேதுறென்ற ராயப்பரும்
பெண்பிள்ளைகள் முன்பு பேதுருவு மச்சமுற்று
வருகிறதைக் கண்டு வல்லசுதன் சீஷனென்று
கண்டவர்கள் சொன்னார்கள் கர்த்தருட சீஷனென்று
அந்த மொழிகேட்டு அர்ச்சிஷ்ட ராயப்பரும்
நானறியே னென்றுசொல்லி நலமின்றி மூன்றுமுறை
தானே மறுதலித்து தயங்கிநிற்கும் வேளையிலே
கொக்கரித்து கல்சேவல் கூவினதே மூன்றுமுறை
கைப்பாசன் வாசலிலே கடினமாய்க் கூவினதே
அப்போ திருச்சுதனார் அவன்முகத்தை தான்பார்க்க
நாணி கபடமுற்று நஞ்சுதின்ற மீனதுபோல்
ஓடியே தான்மறைந்தார் ஒருநொடியில் ராயப்பரும்
அப்பாலுங் கைப்பாசு அரசன் பிலாத்திடத்தில்
அழைத்துக்கொண்டு போங்களென்று அளித்திட்டான் சேவகர்க்கு
அந்த மொழிகேட்டு அவர்கள் சினந்தொடுத்து
எழுந்திரடா வென்றுசொல்லி எம்பரனைத் தானடித்தார்
பற்றி பிடித்திழுத்து பாதகரு மேயடித்தார்
மோதி யடித்தார்கள் முத்திமரி புத்திரனை
நின்றபின்பு நிஷ்டூரர் நிலந்தெளிந்த வுதயமதில்
அடித்து மிகநடத்தி யப்போது யூதர்களும்
பொல்லாத யூதர்களும் போஞ்சு பிலாத்திடத்தில்
அழைத்துக்கொண்டு போனார்கள் அவனுடைய அரண்மனைக்கு
அப்போது வரசனுட அருந்தேவி நித்திரையில்
கண்டாளே யோர்கனவு கர்த்தரிவ ரென்றறிந்து

பார்த்தாளே கனவுதனில் பரமசுத னென்றறிந்து
அருண்டு எழுந்திருந்து அரசன்முன் னோடிவந்து
சீராய் நமஸ்கரித்து சேதிதனை சொல்லலுற்றாள்
உலகம் படைத்தகர்த்த னுன்னுடைய வரண்மனைக்கு
கொண்டுவரக் கண்டேனே கொற்றவரே நீர்கேளும்
அழைத்துவரக் கண்டேனே ஐயாவே நீர்கேளும்
இழுத்துவரக் கண்டேனே யந்தவேலை மெய்ப்பரனை
கொலைபடுத்தக் கண்டேனென் கொற்றவரே நீர்கேளும்
(நான்) மனையாளு மானாலும் மன்னவனே யென்வார்த்தை
பெண்சாதி யானாலும் புண்ணியனே என்வார்த்தை
இதற்குச் செவிகொடுப்பீர் என்னருமை பத்தாவே
ஆதிப் பிதாவின் அரியதிரு புத்திரனார்
பாவிகளை மீட்கவந்த பரமனிவர் தானென்று
என்னுடைய சொற்பனத்தில் இப்படியே கண்டேனையா
என்றுமிக சொல்லி யேகினாள் அரண்மனைக்கு
அரண்மனைக்குச் சென்ற அதுசமயத் துள்ளாக
கொண்டுவந்து விட்டார்கள் கொற்றவரை பிலாத்திடமாய்
எங்கோனைப் பார்த்து ஏதுரைப்பான் பிலாத்துதுரை
(அவர்) கட்டவிழ்க்க சொல்லியங்கே கட்டவிழ்த்து மிட்டானும்
விட்டபின்பு யூதர்களை வேந்தன்பார்த் தேதுரைப்பான்
(இவன்) பொல்லாங்கு செய்ததென்ன புகலுங்க ளெந்தனுக்கு
என்றவுடன் யூதரெல்லாம் எடுத்துரைப்பார் பொய்சாட்சி
கண்டு பிடித்துவந்தோம் காட்டில் நசரேசை
வளைந்து பிடித்துவந்தோம் வனத்தில் நசரேசை
மட்டி லடங்காத வனுகுற்றஞ் செய்துவந்தான்
காரணமாம் பொய்யனென்று கனமாக நாட்டிவைத்தார்
குற்றமிக வென்றுசொல்லி கூவினார் யூதர்களும்
என்றுமிக பொய்சாட்சி யியம்பினார் யூதர்களும்
அந்த மொழிகேட் டதிகாரி பிலாத்து துரை
யூதர்கள் முன்பாக ஏதுரைப்பான் பிலாத்து துரை
காரண மிவன்பேரில் காணேனே குற்றமென்றான்
விசாரித்து பிலாத்துதுரை விரும்பியே யேதுரைப்பான்
கலிலேய நாட்டனென கழறுகிற படியினாலே
அந்நாட்டை யாளுகின்ற வதிபதி யெரோதனிடம்
அழைத்து கொண்டு போங்களென்றான் அப்போது கொற்றவனை

## ஆண்டவரைப் பரிகாச இராசாவாக ஸ்தாபித்தல்

பார்த்துமே யெரோதன் பரம திருச்சுதனை
ஆண்டவ ரென்றறிந்து அறியா தவன்போல
வந்துமே யெரோதன் வல்லவரைத் தான்பார்த்து



ஓகோ அனாதி ஒருபுதுமை செய்யுமென்றான்
(அவர்) வாக்கு திறவாமல் மவுனமாய் தானிருந்தார்
இருந்தபின் னெரோதன் இவ்வுலகில் பித்தனென்றான்
உலகத்து ராசனிவர்க் குற்றசட்டை போடுமென்றான்
அவனியில் ராசனிவர்க் கழகுசட்டை போடுமென்றான்
பொல்லாத யூதர்களும் பூத்தவெள்ளை வஸ்திரத்தால்
போர்த்தியே யப்போது புண்ணியனுக் கேதுசொல்வார்
புகழ்ச்சி புகழ்ச்சிஐயா பூவுலகில் ராஜாவே
மகிழ்ச்சி மகிழ்ச்சிஐயா வையகத்து ராஜாவே
என்றுசொல்லி தூஷணித்தார் ஏகனைத்தா னப்போது
மேட்டிமையாய் வார்த்தைகளை விளம்பியே யெரோதன்
கடுகவிலாத் திடமாய் கர்த்தனைக்கொண் டேகுமென்றான்
அந்த சொல்லைக்கேட்டு அவர்கள் மிகச்சீறி
பரியாசப் பங்கம் படுத்தியே ஆண்டவரை
நடத்திக்கொண்டு போனார்கள் நல்ல திருச்சுதனை
வாருமையா ராஜாவென்று வஞ்சனையாய் தானழைத்து
சேறுஞ் சகதிகளும் தேவசுதன் மேலறிந்தார்
அடித்தார்க ளாண்டவரை யாரு யுதிரஞ்சிந்த
கோஷ்டிகளுங் கொண்டுமிக கொற்றவனை வீதிதனில்
இழுத்து நடத்தியேதான் ஏகுமென்றே தானடித்தார்

## கற்றூணிற் கட்டியடித்தல்

கண்டு பிலாத்துதுரை கடுஞ்சூத ரைப்பார்த்து
நற்றவனை யெந்தன்முன்னே நாடியே கொண்டுவந்தீர்
கொற்றவனை இத்தெருவில் கோரணிகள் செய்தீர்கள்
பொல்லாத யூதர்களே புகலுங்க ளென்றானே
அந்த மொழிகேட்டு அவர்கள் சினந்தேதுரைப்பார்
குற்றமுண்டு மெத்தவென்று கூறினார் யூதர்களும்
ஏசியே தூஷணித்தார் எம்பரனை யப்போது
தார்வேந்தன் தீர்வையிட சதிகாரப் பாதகரும்
கேட்டார்கள் தீர்வையிட கிருபையுள்ள ராயனைத்தான்
காவலனு மப்போது கடுஞ்சூத ரைப்பார்த்து
காணும் முறைப்படியே கட்டி யடியுமென்றான்
கோப மிகவாகி கொடுஞ்சூத ரப்போது
தாருமென்று தீர்ப்புபெற்று சதிகார ரப்போது
அந்தரங்க மாகவேதான் அவர்கள் மிகப்பேசி
அம்புவியில் ராப்பகலாய் அதிகமிக கள்ளனென்று
கொல்லவே வேணுமென்று கொடுஞ்சூதர் தான்பேசி
தெருவுதனில் தானிறுத்தி சேறுமண்ணுந் தான்புரள
அநேகபல கோஷ்டிசெய்து ஆண்டவரைக் கொண்டுசென்றார்

நாலுபல ஜாதிகளும் நடக்குந்தெரு வீதியிலே
ஆகாத வஞ்சகர்கள் அவனவனு மேசீறி
கன்னி மரிமகனை கற்றாணில் சேருமென்று
சேசுபரன் கரத்தை சேர்த்துமிகக் கற்றாணில்
இறுக்கினார் கற்றாணில் ஏகத் திருச்சுதனை
நல்ல சதைசுருங்க நாதனையுங் கட்டியபின்
சாட்டையுஞ் சங்கிலியும் சவுக்கும் பலகசையும்
சின்ன தடியுடனே சிறுவாறுங் கொண்டுவந்தார்
வர்ணதிரு மேனியெங்கும் வழிந்துதிர மோடிடவும்
பயிர்போல் தசைதெறிக்க பரமன் றிரு மேனியெங்கும்
சாட்டை சவுக்கதனால் சண்டாளர் தானடித்தார்
வீசினா ராண்டவரை வெள்ளரத்தமாயோட
சின்னங்கள் பேசியங்கு சிலபே ரடித்தார்கள்
நைந்து சதைகிழிய நல்லரத்தஞ் சிந்திடவே
வஞ்சகர்கள் தானடிக்க வையகந் திரண்டதுபோல்
(கோபம்) பொங்கி வருகுதென்று புண்ணியனார் தானிருந்தார்
பூமியைப் பார்த்துக்கொண்டு பூச்சியமாய் நின்றிருந்தார்
சுத்தமுள்ள ஆண்டவரும் சூதருட ஆக்கினைக்குள்
நின்றார் பொறுமையுடன் நேரான கற்றாணில்
அடங்காத கோபம் அவர்கள் மனதில்வைத்து
தெய்வதிரு மேனியெங்கும் செந்நீரோட வடித்தார்
ஐயா யிரத்துசொச்ச அடிக ளடித்தார்கள்
கற்றாணி லாண்டவரைக் கட்டவிழ்த்து விட்டபின்பு
பட்டவடி போதாமல் பரமசுதன் றிருமேனி
நல்ல சதைகிழிய நைந்துரத்த மாறோட
அடித்தபொல்லா யூதருட அவர்கள்சட்டை தானணிந்து
வெடித்த சரீரமெல்லாம் வேறுரத்தம் பீறிடவும்
அந்த சபைதனிலே அபிமான பேதகமாய்
குனிந்துமிக நில்லுமென்றார் கொற்றவருந் தானிருந்தார்
கூறினார் யூதர்களும் கொற்றவருக் கப்போது
குனிந்து எழுந்திருந்தார் கொற்றவருங் கஸ்தியுடன்
அடிபட்ட மேனியிலே ஆகாத வன்கணர்கள்

## முண்முடி சூட்டப்படுதல்

இவ்வுலகில் ராஜாங்கம் இவர்தரிக்க வேணுமென்று
பார்த்திபனார்க் கப்போது பாரமுடி சூட்டுமென்றார்
கொண்டுசென்றா ராண்டவரைக் கொடியோர் மிகச்சீறி
நாற்காலி மேலே நசரேசை தானிறுத்தி
தூஷணங்கள் பேசியல்லோ துப்பினார் திருமுகத்தில்
முள்முடி சூட்டுமென்றார் மோனபரன் தன்சிரசில்



உலகமுடி வேந்தருக்கு வுற்றமுடி சூட்டுமென்றார்
எட்டாத காரணர்க்கு என்பிரிய மானவர்க்கு
சிகப்புசட்டை தானணிந்து சிரசில்முண் முடியழுத்தி
சிகப்புக் குருதி செறிந்தோட நாதருக்கு
எழுபத்தி ரண்டுமுள் இருந்தமுடி தான்தரித்து
முதுகில் குருதிசெல்ல முதலோனுக் கப்போது
விருப்பமுற்ற யூதர்களும் வேந்தனுக்கு மூங்கில்தடி
கபடமாய் கொண்டுவந்து கர்த்தரின் கையில்கொடுத்து
முத்துமுடி சூட்டுதற்கு முதிர்ந்த திருச்சிரசில்
காசினியில் ராஜனென்று கனயூதர் சேசுதன்னை
ஏசியே தூஷணித்து எம்பரனை யப்போது
ஓங்கியே மூங்கில்களால் உத்தமனை தானடித்தார்
(அவர்) சிரசின் நரம்பறுந்து சில்லிரத்த மாறோட
எட்டியே தானடிக்க இறங்கி மண்டையில்பாய்ந்து
ஏகன் திருமுடியில் இரும்புமுள் பட்டுருவி
தேன்பா லமிர்தமென திருமுலைப்பா லுண்டாரத்தம்
ஆறாக வோடினதே அந்தரத்தம் கொண்டல்லவோ
மறைத்தார் நரகவழி மாமரியாள் திருமகனார்

## பிலாத்தன் தீர்ப்பு

இப்படியாயவரை இழுத்தடித்த பின்னாலே
வருமமுடனே யழைத்து மாபாவி யூதர்களும்
போஞ்சு பிலாத்திடமாய் போய்க்கூட்டி விட்டார்கள்
பார்த்து பிலாத்து துரை பயந்து நடுநடுங்கி
கண்டு பிலாத்துதுரை கண்ணீருந் தான்சொரிந்து
ஐயையோ பாதகரே அதிககஸ்தி செய்தீர்கள்
வையகத்தில் நீங்களுந்தான் மகாகஸ்தி செய்தீர்கள்
மெய்யோனை இப்புவியில் விட்டுவிட வேணுமென்று
சொன்னான் பிலாத்துதுரை சூதர்களு மப்போது
அந்தமொழி கேட்டு அவர்கள்சினந் தேதுரைப்பார்
போட்டார் ஒருசத்தம் போஞ்சு பிலாத்தைப்பார்த்து
கொல்லாமல் விட்டுவிட்டால் குலபெரிய ராயருக்கு
ஓலை எழுதிடுவோம் உன்னரசை மாற்றிவைப்போம்
நிருபம் எழுதிடுவோம் நிச்சயமி தென்றுரைத்தார்
கூடியொரு சத்தமாய் கோடையிடி போல்குமுறி
உரைக்கவே யூதர்களும் ஓடிவந்து பிலாத்துதுரை
(அவன்) பயந்து நடுநடுங்கி பாரில் நசரேசை
கைகழுவி ஒப்புவித்தான் கனயூதர் கூட்டமதில்
எனக்குமென் தேவியர்க்கும் இனிபிறக்கும் மைந்தருக்கும்

இந்தபழி வேண்டாமென்று இயம்பியே கைகழுவி
கையளித்த பின்பு கனயூதர் கூட்டமதாய்

## சிலுவை சுமத்தப்படுதல்

கனத்த சிலுவைதனை கடுகெனவே செய்துவைத்து
அழைத்துக்கொண்டு போனார்கள் ஆண்டவரை யப்போது
கஸ்தி மிகவருத்தி கனசிலுவை தானெடுக்க
பார சிலுவையொன்றை பகைகாரர் கொண்டுசென்றார்
கனத்த சிலுவையொன்றை கடுகெனவே கொண்டுசென்றார்
கொண்டுபோய் தான்நிறுத்தி கொடுயூதர் பாவிகளும்
பார சிலுவைதனை பரனையெடு மென்றுரைத்தார்
ஆகடிய யூதர்களும் அடித்தார்க ளாண்டவரை
குனிந்து எடுத்தாரே குவலயத்து மானிடர்க்காய்
நல்ல திருச்சுதனார் நானிலத்து மானிடர்க்காய்
தயங்கினா ரப்போது தர்மபரி பாலகனார்
தூக்கி யெடுப்பதற்கு தூய்யபரன் தத்தளித்து
வல்ல பிதாவை மனதில்மிக தானினைந்து
தூக்கி திருச்சிலுவை துய்யபரன் தோளில்வைத்து
முழுச்சிலுவை பாரமதை முத்திமரி பாலகனார்
தாங்கியே தோளில்வைத்து தற்பரனார் தானடந்தார்
நடந்தார் சிலதூரம் நாயகனா ரப்போது
தோளில் நரம்பறுந்து துய்யரத்த மாரோட
ஜெருசலையாம் மாநகரில் தெருவீதி தானடந்தார்
கண்ட சிலமனுவோர் காசினியில் கண்கலங்கி
பார்த்த சிலமனுவோர் பரிதபித்து தானழுது
பார்க்க சகியாமல் பதறியே யழுகலுற்றார்
கண்ணீருந் தான்சொரிந்து கனத்த துயரமுற்று
பார்த்துசில பட்டணத்தார் பரதேச மானார்கள்
கண்டு அவரவர்கள் கர்த்தருட கஸ்திகளை
கண்ணீருந் தான்சொரிந்து கதறி யழுகலுற்றார்
ஐயையோ இம்மனிதன் ஆர்பெற்ற புத்திரனோ
எந்தவொரு புண்யவதி யீன்றநல்ல கண்மணியோ
தெய்வ நிழலாடும் திருமுகத்தைப் பாரீரே
கருணை செறிந்தமுகம் காணுதே மைந்தனுக்கு
பூமிதோ காதஒரு புண்ணியன்போல் காணுகிறார்
அழகு திருமகன்டீ ஐயையோ பாதகமே
என்னதான் குற்றமிவர் இவ்வுலகில் செய்தாரோ
உலகமே தாளாத ஒருகுற்றம் செய்தாரோ
தேசமே தாளாத தீங்குதா னென்செய்தார்
வையகத்தில் யூதர்ஜனம் மாகொடுமை செய்தார்கள்



குவலயத்தில் பொல்லாத கொடுமைகளைச் செய்தார்கள்
என்னவென்று நாங்கள்சொல்வோம் அவர் அடையுங் கஸ்திகளை
மட்டி டைங்குமோ தான் வழுத்துதற்கு மாந்தர்களே
என்றுசொல்லி தானழுவார் ஏகபரனைப்பார்த்து
கண்டு அழுதார்கள் காசினியோர் மனங்கலங்கி
நின்று அழுதார்கள் நீதியுள்ள ஆண்டவர்க்காய்

## வெரோணிக்கம்மாள் ஆண்டவரின் திருமுகந் துடைத்தல்

அந்தநல்ல வேளையிலே அழகுகுடங் கைபிடித்து
வந்துநின்ற வெரோணிக்காள் வானபரனைப்பார்த்து
ஐயையோ தற்பரனே ஆண்டவனே சற்குருவே
வையகத்தி லிக்கொடிய வாதைப் படுவானேன்
பொல்லாத யூதருமைப் பிடித்தடித்துப் போறாரே
அடுக்குமோ இப்பெரிய ஆகடியஞ் செய்வதுதான்
என்றுசொல்லி வெரோணிக்காள் ஏகசுதன் வரும்வீதி
கண்டுமிக ஆண்டவரும் கனிவுடனே தானழைத்தார்
சோதிசுதன் அவளை துகிலொன்று தான்கேட்டார்
ஆண்டவரும் துகில்கேட்க அக்கணமே வெரோணிக்காள்
முத்துபோல் கண்ணீரை முகமெல்லாம் சோரவிட்டு
கையில் துகில்கொடுத்தாள் கர்த்தருக்கு மப்போது
(அதை) வாங்கிமுகம் துடைத்து வல்லசுத னப்போது
கூப்பிட்டு ஆண்டவரும் கொடுத்தா ரவள்கையில்
கொடுத்து அவள்கையில் கூறலுற்றார் ஆண்டவனார்
மாதாவும் ஜுவானியரும் வருவார்கள் இத்தெருவில்
தாயாரும் ஜுவானியரும் தான்வருவார் இத்தெருவில்
உதிரக் கறையும் உயர்ந்த முகத்தழகும்
பதிந்தஇந்த சீலைதன்னைப் பக்ஷமுடன் காட்டுமென்றார்
பதிந்தஅந்த சீலைதன்னைப் பார்த்தந்த வெரோணிக்காள்
கைநடுங்கி கால்நடுங்கி காரணரைப் பார்த்தழுது
ஐயையோ சற்குருவே ஆண்டவரே கர்த்தாவே
மெய்யாக இப்புவியை மீட்கவந்த தற்பரனே
என்றலறித் தானழுது ஏகினளே வெரோணிக்காள்

## ஜெருசலேம் ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுதல்

நடந்தாள் ஜெருசலையின் நடுத்தெருவின் வீதியிலே
அப்போ சிலமாதர் ஆண்டவரைக் கண்டழுக
பார்த்தார் பரனார் பரதவிக்கும் மாதர்களை
எந்தனுக் காகவல்ல இப்புவியில் கஸ்தியுடன்
எனக்கா யழுவானேன் இந்ததுயர் கொள்வானேன்
உங்கள்பவத் துக்காக உத்தரித் தழுவுங்கள்

பச்சை மரத்திற்கேஇப் பாடானால் ஐயையோ
காய்ந்த மரமானவுங்கள் கதியென்ன பாரீர்கள்
என்றுசொல்லி திருச்சுதனார் ஏகினார் சஞ்சலமாய்
அந்தத் தெருவைவிட்டு அப்பாலே சென்றபின்பு
உருகி மனங்கலங்கி உகந்துவந்தாள் வெரோணிக்காள்
அழுது மனமுருகி ஆண்டவனார் படும்பாட்டை
பார்த்து மனங்கலங்கி பாதையினில் வந்துநின்றாள்

## தேவமாதா திருமகனைத் தேடிவருதல்

மாதா மரியம்மாள் மகனைமிக தான்தேடி
அழுது புலம்பி அலறி அபயமிட்டு
நடந்தாளே தேவகன்னி நல்சுதனை தான்தேடி
கண்டார் ஜுவானியரும் கன்னிமரி தாயாரை
அந்நேர மானதிலே அருளப்பர் சொல்லுகிறார்
அம்மணி தேவகன்னி அருஞ்சுதனைத் தான்கண்டேன்
குருசைமிக தோள்சுமத்தி கொடுபோறார் யூதர்களும்
என்று ஜுவானியரும் இயம்பினார் மாமரிக்கு
அந்தமொழி தான்கேட்டு ஐயோ மகனேயென்று
கூந்த லவிழ்ந்துவிழ கொற்றவியும் மார்பறைந்து
மெய்தானோ ஜுவானியென்று வெகுவா யழுகலுற்றாள்
ஐயோநா னென்னசெய்வேன் ஆண்டவனே என்றழவும்
வந்துநின்று ஜுவானியரும் மாதாவுக் கேதுரைப்பார்
தாயே மரியே (நம்) தற்பரனார் தன்முகத்தில்
போய்விழிப்ப தற்குஇதோ போவோமே வாருமென்றார்
அந்தமொழி கேட்டு ஆண்டவளு மேதுரைப்பாள்
இவ்வதைக்கோ வுன்னைப்பெற்றேன் இப்புவியில் என்மகனே
(உன்) பொன்னான தேகமது புண்படவோ நான்வளர்த்தேன்
பாடுபட வோவளர்த்தேன் (என்) பைங்கிளியே என்றழுவாள்
முத்து முடிகுலைய முற்றத்தில் நின்றழுவாள்
சீரார் முடியவிழ தெருவினிலே நின்றழுவாள்
ஜெருசலேயாம் பட்டணத்தின் தெருதனிலே யந்நேரம்
ஒன்றாந் தெருவினிலே ஓசையிட்டுத் தானழுதாள்
இரண்டாந் தெருவினிலே ராசகன்னி தானடைந்தாள்
மூன்றாந் தெருவினிலே முத்துமரி மாதாவும்
வந்துநின்று துயரமுடன் வாய்திறந்து ஏதுரைப்பாள்
வார மனிதர்களே வழிபோற மானிடரே
என்பிறப்பே தங்கையரே இத்தெருவு மானிடரே
மற்றும்பர தேசிகளே வழிபோற மானிடரே
(என்) மைந்தனையும் யூதரையும் வழிகளிலே கண்டீரோ
பொல்லாத யூதர்களும் (என்) புத்திரனை வாதைசெய்து



குற்றமில்லா என்மகனை கொண்டுபோறார் காண்கிலேயோ
என்றுமிக தான்கேட்டாள் ஏகமரி மாதாவும்
அத்தெருவின் மானிடர்கள் ஆண்டவளுக் கேதுரைப்பார்
நீதியில்லா யூதர்கள்தான் நெடுந்தெருவே கொண்டுசென்றார்
பார்த்தோமம்மா அவர்துயரம் பதறுதம்மா எங்கள்மனம்
உன்மகனார் தானோ (அவர்) உபத்திரவம் என்னசொல்வோம்
கண்மணியே தாயாரே கலங்குதம்மா எங்கள்மனம்
என்னம்மா தாயாரே ஏதுகுற்றம் அவர்பேரில்
தப்பிதங்கள் என்னசெய்தார் சதிகார யூதருக்கு
என்றுமே அத்தெருவில் ஏகமரி மாதாவை
வந்துநின்று கேட்கையிலே மாதாவு மேதுரைப்பாள்
உலகம் படைத்தகர்த்தன் உருவென்று மாமரியாள்
வண்ணத் திருமரியாள் மண்ணில் விழுந்தழுதாள்
தங்கத் திருமரியாள் தரையில் விழுந்தழுதாள்
மோதி விழுந்தழுது மூர்ச்சித்து சோபமுற்று

## தேவமாதா வெரோணிக்காளைச் சந்தித்தல்

ஏந்தலுக்கு யானுமிப்போ எந்தனுட முந்தாணி
பிகிந்து துகில்கிழித்து பெட்புடனே கைகொடுத்தேன்
சோதி முகந்துடைத்து துய்யபரன் என்கையில்
வாங்கி முகந்துடைத்து வல்லபரன் என்கையில்
கொடுத்து மொழியுரைத்தார் கொற்றவனார் தாயாரே
தந்து மொழியுரைத்தார் தாய்கையில் தாருமென்றார்
வெள்ளை துகில்கொண்டு வேதன் திருமுகத்தை
துடைக்கவே யவர்முகத்தின் சுரூபம் பதிந்ததம்மா
இந்தா என்தாயாரே இதோபாரு மென்றுரைத்தார்
எங்கே அதென்றுசொல்லி ஏகமரி கையேற்று
அந்த உருவுகண்டு ஆண்டவளு முத்தஞ்செய்து
கண்டு மனங்கலங்கி கதறி யழுகலுற்றாள்
அலறி விழுந்தழுது அழகுமுகம் வேருகி
கன்னங்க ளும்வீங்கி கன்னிமரி கைமுறித்து
பொன்னுதிரு மேனிதனை புழுதியிலே போட்டழுதாள்
தங்கதிரு மேனிதனை தரைதனிலே போட்டழுதாள்
வர்ணகருங் கூந்தலையும் மண்புரள போட்டழுதாள்
தோகையிளங் கூந்தலையும் தூசியிலே போட்டழுதாள்
ஓங்கி விழுந்தழுது உத்தமனே யேசுவென்பாள்
தாவி விழுந்தழுது தற்பரனே யேசுவென்பாள்
அழுது புரண்டுமிக அன்னைமரி யேதுரைப்பாள்
என்னசெய்வேன் என்மகனே இகல்சூதர் செய்வினையால்
கண்மணிநீ போறவழி கபாலமலை யெத்தூரம்

என்மகனார் போறவழி யெத்தூரம் ஜூவானிஎன்றான்
வந்துமிக ஜூவானியரும் மாதாவுக் கேதுரைப்பார்
பார்த்தார் நடுத்தெருவில் பரமசுதன் போறவழி
காணேனென் றேதானும் கடுகெனவே தானோடி
கபாலமலை முன்னால் கறடுமலை தானுமுண்டு
ஏறியே பார்த்தாராம் ஏகசுதன் போறவழி
நாகசுர மேளங்கள் நல்லகொம்பு ஓசைகளும்
செந்தூள் பறக்கிறதும் சேசு நடக்கிறதும்
கருந்தூள் பறக்கிறதும் கர்த்தன் நடக்கிறதும்
யூதர்கள்தா னோடிவந்து சூழ்ந்துகொண்டு போகிறதும்
கண்டுமே ஓடிவந்து கன்னிமரிக் கேதுரைப்பார்
கண்டேன் அடையாளம் கர்த்தாவும் போறவழி
பார்த்தே னடையாளம் படுயூதர் கும்பலிலே
சிக்கிரத்தில் வாருமம்மா சேசுதனை போய்ப்பார்ப்போம்
என்று ஜூவானியரும் இயம்பினார் மாமரிக்கு
கடுக நடந்தார்கள் கன்னிமரி ஜூவானியரும்
போறவழி யெங்கேயென்று புண்யவதி தாயாரும்
அலறி நடந்தழுதாள் அங்கலாய்த்து மாதாவும்
என்மகனார் போறவழி யெத்தூரம் என்றழுதாள்
(என்) கண்மணிதான் போறவழி கபாலமலை யெத்தூரம்
என்று புலம்பி எடுத்தடிவைத் தேநடந்தாள்
விம்மிமிக தானழுது வீதிமிக தானடந்தாள்
கும்பி குரலுமிட்டு கொற்றவளுந் தானடந்தாள்
கைநழுவ விட்டேனே கடுஞ்சூதர் தானடிக்க
இத்தூரம் தேடிவந்தோம் என்சுதனைக் காணேமே
இரத்த குறிக்கண்டேன் எழில்முகத்தைக் காண்பதெப்போ
நடந்த குறிக்கண்டேன் (என்) நல்மகனைக் காண்பதெப்போ
(என) கதறி யழுதுநின்று கண்ணிரண்டும் பஞ்சடைந்து
வண்மைசெறி யென்மகனின் வர்ண திருமுகத்தை
பார்க்கலா மென்றாலும் பாவிகள்தா னெந்தனுக்கு
காண்பிக்க வில்லையென்று கன்னிமரி தானழுதாள்
முழிக்கவில்லை யென்றுசொல்லி மோதி விழுந்தழுதாள்
இன்னமுந்தா னெத்தூரம் இந்த ஜெருசலைவீதி
படியேந்தல் பட்டணத்து பரும்வீதி எத்தூரம்
வினையூதர் பட்டணத்து வீதிகளும் எத்தூரம்
தூரமோ காதமோ தொலையில்லையே இந்தவழி
மாறாட்ட யூதர்தெரு மாளவில்லை யென்றழுதாள்
மாதா ஜூவானியிடம் மனுஷர்களைக் கேளுமென்றாள்
கண்டவர்கள் சொன்னார்கள் கடுஞ்சூத ரப்போது
பார்த்தவர்கள் சொன்னார்கள் பருங்குருசை தானெடுத்து



பார திருக்குருசை பரமன்றிருத் தோள்பொருத்த
அசைந்தசைந்து தள்ளாடி ஆண்டவரும் போறாராம்
தத்தளித்து தடுமாறி தாங்கி அடியைவைத்து
வைத்து அடித்திழுக்க வானவனை யிப்போது
இளைப்பு தவிப்புடனே ஏழாந் தெருவினிலே
இழுத்துக்கொண்டு போறாராம் என்தாயே தற்பரனை
தத்தளித்து தடுமாறி தாங்கியடி. மெல்லவைத்து
தூக்கியடி மெல்லவைத்து துய்யபரன் போறாராம்
சோரி வடிந்தோட சோதிபரன் போறாராம்
வீதி யெல்லாந்தாண்டி வெகுதூரம் போறாராம்
காடு செடிதாண்டி கனதூரம் போறாராம்
அலங்க மலங்கவேதான் அடித்துக்கொண்டு போறார்கள்
தள்ளி யடிக்கும்போது தற்பரனார் தான்விழுந்து
விழுந்து எழுந்திருந்து வேதபரன் போறாராம்
தக்க கவனமுடன் தற்பரனார் போறாராம்
கேட்டு வந்தேனம்மா கேடுகெட்ட யூதர்களும்
வர்மமாய் கொண்டுசென்று வதைக்குமுன்னே மாதாவே
பதைக்குதம்மா என்மனது பார்க்கவே வேணுமிப்போ
துடிக்குதம்மா என்மனது துரிதமுடன் வாருமென்றார்
நடுங்குதம்மா என்மனது நடந்தோடி வாருமென்றார்
நல்லதென்று மாதாவும் நடந்தாரே ஜூவானியுடன்
நிழல்கண்டால் நின்றறியாள் நீதியுள்ள ஆண்டவளும்
தண்ணீரைக் கண்டாலும் தாகவிடாய் தீர்த்தறியாள்
ஓடி தடுமாறி உற்றமரி தான்விழுந்தாள்
நாதனே யென்றோடி நல்லமரி தான்விழுந்தாள்
கடுகவே தானோடி கன்னிமரி தான்விழுந்தாள்
அலண்டு நடந்தோடி ஆண்டவளுந் தான்விழுந்தாள்
புலம்பியே தானழுது புகழ்பெரிய இராசகன்னி
ஜூவானியரை தான்பார்த்து துய்யகன்னி யேதுரைப்பாள்
வீதியெல்லாம் தாண்டிவந்தோம் வேந்தனைத்தான் காணோமே
காணவேணும் ஜூவானியரே கடுகெனவே நீயோடி
கூரைக்கு மேலேறி கொற்றவரைப் பாருமென்றாள்
குன்றுமே லேறி (யென்) குமாரனைநீ பாருமென்றாள்
சொன்னவுடன் ஜூவானியரும் சுருக்குடனே தானோடி
பார்த்தாராம் ஜூவானியரும் பரமசுதன் போறவழி
கண்டார் ஜூவானியரும் கர்த்தர் சிலுவையுடன்
சுழன்று விழுவதையும் சூதர்செய்யும் வாதனையால்
கவிழ்ந்து விழுவதையும் கனயூதர் கும்பலிலே
முன்னும்பின்னும் தள்ளுவதும் முழங்கால்கள் தேய்வதுவும்
கண்டுமிக ஜூவானியரும் கண்கலங்கி தானழுது

கடுகெனவே வாய்குளற கன்னிமரிக் கேதுரைப்பார்
மாசில்லா சேசுதன்னை வலுயூதர் தான்திரளாய்
தள்ளிக்கொண்டு போறார்கள் தாயாரே வாருமென்றார்

### மாதா மகனைச் சந்தித்தல்

அலறி அழுதுகொண்டு அக்கணமே மாதாவும்
பதறியே தானேகி (அந்த) படுயூதர் கும்பலிலே
ஏகியே மாமரியும் ஏசுநாதர் முன்பாக
அலறியே மாமரியும் ஆண்டவரைத் தான்பார்த்து
என்மகனே கண்மணியே இனியதொரு புத்திரனே
பரம திருச்சுதனே பாருலகி லீன்றெடுத்தேன்
உலகிலுன்னை யீன்றெடுத்தேன் யூதருன்னை வாதைசெய்ய
வார்கயிறு சங்கிலியும் வலுபிரம்பு யத்தனமும்
கூடிய முண்முடிக்கோ குருசுக்கோ ஈன்றெடுத்தேன்
பாரச் சிலுவைக்கோ பாலகனே ஈன்றெடுத்தேன்
கண்காட்சி பார்க்கவோதான் காசினியி லீன்றெடுத்தேன்
இக்கொடிய பாடுபட இவ்வுலகி லென்மகனே
பெற்று வளர்த்தெடுத்தேன் பேருலகி லென்மகனே
(தன்) ஆவியற்று மெய்மறந்து ஆண்டவனுந் தானலறி
கூப்பிட்ட சத்தமது கொற்றவனார் காதில்விழ
கேட்டதும் ஆண்டவர்தான் கிளப்பரிய சிலுவையுடன்
பார்த்ததும் நேசமுடன் பரமசுதன் தாயாரை
பார்த்து அவர்களைத்து பருங்குருசோ டேயிடறி
குப்புறவே தான்விழுந்தார் கொற்றவனா ரப்போது
வந்து மிகப்புலம்பி மாதாவுந் தன்மகனை
கட்டித் தழுவியேதான் கர்த்தரிட தாயாரும்
வர்ண முகந்தனிலே மாதாவுங் கன்னம்வைத்து
முத்து முகத்தோடே மோதியே தானழுது
கன்றிழந்த பசுபோல கதறியே யழுகலுற்றாள்
புலம்பியே அழுகலுற்றாள் புண்யசுதன் தாயாரும்
அலறியே அழுகலுற்றாள் ஆண்டவனார் தாயாரும்
பார்த்துமிக மாதாவை பரமசுதன் ஏதுரைப்பார்
காசினியில் கன்னிகையே கடினதவ சுள்ளவளே
பெண்ணா யுதித்தவளே பேருலகில் கன்னிகையே
பரிசுத்த கன்னிகையே பாலகனா நானுனக்கு
வையகத்தி லுன்மகனை மறந்துவிட வேணுமம்மா
வல்லமரி மாதாவே மறந்துவிடு இத்துயரம்
என்றுசொல்லி அன்னையர்க்கு ஏகபரன் தானடந்தார்
நல்லசுதன் தானுரைத்து நடந்தார் கபாலமலை
உத்தமனார் தானுரைக்க உயர்ந்தகன்னி மாமரியும்



நின்றாளே ராசகன்னி நெடுநேரம் துக்கமுற்று
அழுகிற வேளையிலே அநியாய யூதர்களும்
மாபாவி யூதர்களும் மாதாவை தான்விலக்கி
வெகுநேர மாச்சுதென்று விலக்கியே ஆண்டவரை
நடத்திக்கொண்டு போனார்கள் நாதரையு மப்போது
நல்லமரி ஜுவானியரும் நடந்தா ரவர்பிறகே
நின்றாளாம் ராசகன்னி நெடுமூச் செறிந்திடவே
கல்வாரி மலைதனைக்கே கடியநட வென்றடித்தார்
வாரிதிபோல் ரத்தம் வடிந்துமிக சிந்திடவே
கல்வாரி மேட்டினிலே கர்த்தர் விழுந்தெழுந்தார்

### சிரேனே என்கிற சீமோன் உதவி செய்தல்

நடக்க முடியாமல் நாதரும் தத்தளித்து
விழுந்து எழுந்திருந்து வேதபரன் போறாராம்
பார குருசை பரன்எடுக்க மாட்டாமல்
தாங்கமாட் டாமல்மிக தடுமாறி தான்விழுந்தார்
எழுந்திருக்க மாட்டாமல் என்பரனார் மெய்மறந்து
தூக்கமாட் டாமல்மிக துவண்டு விழுவதையும்
வாயினால் ரத்தம் வடிந்தோடி போவதையும்
கண்டு அந்த யூதர்களும் கடின மனசுடனே
சொன்னார்கள் இராசனுக்கு சுருக்காகத் தானோடி
வந்துமிக தானவனும் வல்ல திருச்சுதனை
பார்த்துமிக வப்போது படுஞ்சூதர்க் கேதுரைப்பான்
ஓடியே நீங்களுந்தான் ஒருவனைத் தான் அழைத்து
கூலி தனைக்கொடுத்து கொண்டோடி வாருமென்றான்
நல்ல தென்றுசொல்லி நடந்து சிலயூதர்
பார்த்தார் சிமியோனை படுசூத ரப்போது
கண்டார் சிமியோனைக் கைகூலி தான்கொடுத்து
அழைத்துவந்து விட்டார்கள் ஆண்டவனார் குருசடியில்
கூட்டிவந்து விட்டார்கள் கொற்றவனார் குருசடியில்
தூக்கவே சொன்னார்கள் துய்யபரன் தோள்சிலுவை
எடுக்கசிமி யோன்சிலுவை எழுந்திருந்து ஆண்டவரும்
தாங்கவே சிமியோனும் தற்பரனார் தானடந்தார்
நடந்தார் கபாலமலை நல்ல திருச்சுதனார்
பரம திருச்சுதனார் பார மலையோரம்
கடுக திருச்சுதனை கபாலமலை கொண்டுசென்றார்

### திருச்சட்டை உரியப்பட்டு சிலுவையில் அறையப்படல்

கொண்டுபோய் யூதர்களும் கொலைகளத்தி லேநிறுத்தி
சட்டையைத் தானுரித்தார் தற்பரனை யப்போது

பிய்ந்து திருச்சரீரம் பீறிரத்த மாயோட
தள்ளி குருசதின்மேல் தற்பரனைத் தான்கிடத்த
வல்ல பிதாவை அவர்மனதில் நினைத்தபின்பு
வளர்த்திமிக கால்கரத்தை வலுயூதர் ஆணிகொண்டு
இழுத்துமிக காலாணி இறுக்கினார் சுத்திகொண்டு
வலதிடது கையாணி வல்லபர னுக்கறைந்தார்
மூன்றாணி கொண்டு மூத்துமரி பாலகனை
சுழற்றியே சுத்தியினால் சூதருமே தானடித்தார்
பதறி யுடல்துடிக்க படுயூதர் சிலுவைதனை
குப்புறவே தான்திருப்பி கூராணி தான்மடக்கி
பதினாறு அடிமட்டும் பராபரனை தானிழுத்தார்
எடுத்துமே குருசுதனை இருகள்ளர் தன்நடுவில்
நிறுத்தினார் நிஷ்டூரர் நீண்ட சிலுவைதனை
அப்போ ஆதாம்சிரசு அவ்விடத்தி லேதோன்றி
தாங்கியே நின்றிடுமாம் தற்பரனார் குருசடியில்
சுத்தியைக் கொண்டு சூத ரடித்தசத்தம்
கன்னி மரியம்மாள் காதில் விழுந்திடவே
என்ன ஜூவானியரே என்மகனைத் திருக்குருசில்
அறைந்தனரோ வென்று ஆண்டவளுந் தானழவே
அங்கே மதலேனாள் ஆண்டவரின் பின்தொடர
கல்வாரி மேடாம் கனத்த கபாலமலைமேல்
ஏறுகிற போது ஏதுரைப்பாள் மாதாவும்
கல்லும் பொடியாச்சே கபாலமலை இரண்டாச்சே
(ஏகி) கர்த்தனை யென்றுசொல்லி கன்னிமரி தானழுதாள்
ஏகியே கொலைகளத்தில் ஏகமரி மாதாவும்
கண்டாள் திருக்குருசில் கர்த்தனையு மப்போது
பார்த்தாள் திருக்குருசில் பரம திருச்சுதனை
குருமுனி விட்டரத்தம் குருசில்வடிந் தோடுவதை
மாதாவுங் கண்டு மகாதுயரம் கொண்டழுது
நாதன் குருசடியில் நல்லமரி நின்றழுதாள்
வந்துநின்ற யூதர்களும் வல்லவரைத் தான்பார்த்து
பலபல வார்த்தையினால் பாவிகளும் தூஷணிக்க
(அப்போ) வல்ல மரிமகனார் மனதில்குற்றம் வையாமல்
புண்ணியனா ரப்போது பொறுமையுடன் தானிருந்தார்

### கர்த்தர் சிலுவையில் உயிர்விடுகிறார்

சிலுவையிலே தொங்குகிற சேசுபரன் ஏதுரைப்பார்
அறியாமல் செய்தார்கள் ஆண்டவரே யிவர்கள்குற்றம்
பொறுத்தருள வேண்டுமென்று புண்ணியனார் மூன்றுமுறை
தாவியே வேண்டல்செய்து தனதுவல புறமிருந்த



கள்ளனுக்கு மோக்ஷம் கடுகெனவே தான்கொடுத்தார்
தாமிருக்கு மோக்ஷம் தற்பரனார் தான்கொடுத்தார்
வியே துடித்து அழுதுநின்ற மாதாவை
தற்பரனார் நோக்கி தயவாக சொல்லுகிறார்
தாயாரைப் பார்த்து தற்பரனா ரேதுரைப்பார்
நல்மரியே யுன்மகனார் நானல்ல ஜூவானியென்றும்
ஜூவானியே யுன்தாயார் சுத்தமரி தாமென்றும்
சொல்லியே ஒப்படைத்து சுட்டினார் மானிடர்க்கு
பாடுபட்டு தாகமென்று பரமசுதன் மூன்றுமுறை
கூப்பிட ஆண்டவரும் கொப்பெனவே யூதர்கள்தான்
தாகமென்ற தும்காடி தன்னைக் கொடுத்தார்கள்
ஏழு வசனம் இயம்பியே மானிடர்க்காய்
பாவிகளே யுங்களுக்காய் பாருலகில் பாடுபட்டோம்
சிந்தி திருவுதிரம் ஜெருசலேயின் வீதியிலே
வாரிபோல் ரத்தம் வடித்தோம்இவ் வீதியிலே
இறந்தும் நன்மைபுரிந்தோம் இந்தநன்றி யையுணர்ந்து
வருவாரோ மானிடர்கள் வையகத்தில் நல்வழியில்
என்றுசொல்லி தேவசுதன் ஏகமனஸ் தாபமுடன்
கண்ணீருந் தான்சொரிந்து கலங்கிமனம் நொந்தழுது
(எல்லாம்) நிறைவேற்றி யாச்சுதென்று நேர்மை தலைசாய்த்து
என்னை அழையுமென்று ஏகபிதா வைநோக்கி
சந்த மரிமகனார் சோதிசுட ராத்துமத்தை
ஆதி பிதாவிடத்தில் ஆண்டவரும் ஒப்படைத்து
வையகத்து மானிடர்க்காய் மரித்தார் திருக்குருசில்
சந்த மரிமகனார் தலைசாய்ந்தார் திருக்குருசில்
மரித்தார் நசரேசு வையகங்க ளீடேற
(அப்போ) வானம் குமுறி வையகமும் தத்தளித்து
சந்திரனும் சூரியனும் தடுமாறி தத்தளித்து
இருளடைந்து போய்விடவும் எங்கும்துக்க காட்சியுற
ஆண்டவனா ராச்சரியம் ஆலயத்தில் கட்டிவைத்த
புண்ணியனா ராச்சரியம் பீடத்தின் திரைகிழிந்து
செத்த மனுஷர்களில் சிலபேர் எழுந்திருந்து
பட்டணத்துள் நுழைய பார்த்தா ரனேகருந்தான்
(அப்போ) ஆண்டவரின் ஆத்துமந்தான் ஆதி பிதாக்களிடம்
இறங்கித்தம் தரிசனையை இறந்த பிதாக்களுக்கு
கொடுத்தாரே மோட்சம் குருசடியில் மாதாவும்
வந்துநின்று மாதாவும் வல்ல திருச்சுதனை
அண்ணாந்து பார்த்து ஆண்டவனை மேதுரைப்பாள்
விண்ணோர்கள் போற்றும் வேதனே யென்மகனே
மண்ணோர்க ளுக்காக மரித்தீர் திருக்குருசில்

இனியெனக்கு வேறுதவி இவ்வுலகில் யாருமில்லை
ஆறுதலும் தேறுதலும் ஆர்கொடுப்பார் என்மகனே
பரதேசி யானேனென்று பார்த்தழுதாள் மாதாவும்
வன்ம கொலைக்காரர் வலுயூத ரைப்பார்த்து
தர்மமுள்ள என்மகனார் தலைசாய்ந்தார் திருக்குருசில்
மரித்த திருச்சுதனை வந்திறக்கித் தாருமென்றும்
தாருங்கள் தம்பிஎன்றும் தாயாருங் கேட்கலுற்றாள்
அப்போ ஜுவானியரும் அங்கிருந்த சூசையரும்
ஆகட்டு மென்றோடி அரசன் பிலாத்திடமே
மரித்த நசரேசின் மாதா மரியம்மாள்
கேட்கிறா ளுத்தாரம் கீழே யிறக்கித்தர
தாருங்கள் என்று தாயாருங் கெஞ்சுகிறாள்
என்றசொல்லைத் தான்கேட்டு ஏந்தல்மிக ஏதுரைப்பான்
இன்னம் உயிர்தான் இருக்குதோ வென்றுடனே
சோதித்துப் பாருமென்று சொன்னானே யூதருக்கு

## கர்த்தர் திருவிலாவை ஈட்டியால் குத்துதல்

படைவீர னொருவன் பார்வை யிழந்தவன்தான்
அஞ்சாமல் வந்துநின்று ஆண்டவரின் குருசடியில்
நின்றுமிக ஈட்டியினால் நிஷ்டூர னப்போது
குத்தினா னப்போது குறிப்பாய் விலாதிறக்க
ஈட்டியை விலாவினின்று இழுத்துப் பிடுங்குகையில்
குபீரென்று ரத்தம் குருசில் வழிந்தோட
தாரைபோல் ரத்தமொடு தண்ணீர் வடிந்திடவும்
அதிலே துளிரத்தம் அவன்குருட்டு கண்ணில்பட
கர்த்தர் கிருபையினால் (அவன்) கண்ணும் தெரிந்ததுவே
(அவன்) முழந்தாளின் மேலிருந்து முத்துமரி பாலகனை
தோத்திரங்கள் செய்தானும் துய்யபரன் நசரேசை
அறியாமல் செய்தேன்யான் ஆண்டவனே யெனதுகுற்றம்
பொறுத்தருள வேணுமையா புண்ணியனே யெனதுகுற்றம்
உத்தமனா ரென்றுன்னை உகந்தறியா மற்போனேன்
நிச்சயமாய் நம்பினேன்யான் (என்) நீதியுள்ள ஆண்டவரே
(என்று) அழுது மிகவோடி அறிக்கையிட்டான் ராயனுக்கு
இராயனுந்தா னோடிவந்து நலமாக பார்க்கலுற்றான்
சுதனைமிக கண்ணாலே துரோகி யவன்பார்த்து
சொன்னமனம் புண்ணடைந்து துன்மார்க்கம் தானொடுங்கி
தலையசைக்க ராயனுந்தான் சந்த மரிகுலத்தார்

## கர்த்தரைச் சிலுவையினின்று இறக்குதல்

தற்பரனின் ஆணிகளை தாங்கள் கழற்றிடவும்
ஆணி கழற்றுதற்கு அதற்கான யத்தனமும்



கொண்டல்லோ வந்தார்கள் கொற்றவனார் சீஷர்களும்
வந்தார் குருசடிக்கு வல்லவரை தானிறக்க
வந்துமிக சீஷர்களும் வல்லமரிக் கேதுரைப்பார்
நல்ல திருச்சுதனை நாங்கள் சிலுவைவிட்டு
இறக்கவும் தான்போறோம் எந்தாயே வாருமென்று
ஏணிகளை சாத்தி யேறினார் சீஷர்களும்
காராணி தான்கழற்றி கனத்த சிலுவைவிட்டு
இறக்கியே சீஷர்களும் ஏகமரி கைதனிலே
கொடுத்தார்க ளப்போது கொற்றவனை கையேந்தி
வாங்கி மடியில்வைத்து மாதாவும் புலம்பலுற்றாள்

## திருச்சுதனை மடிமீது வளர்த்தி மாதா புலம்புதல்

ஏங்கி முகம்வாடி யேக திருச்சுதனை
(அவர்) திருவிலா திறந்திருக்க தேவமரி தான்பார்த்து
பார்த்துமிக மாதாவும் பதறி அழுகலுற்றாள்
தாதாவே யென்மகனே தாரணியி லென்னரசே
(என்) கர்த்தனே யென்றுபின்னும் கன்னிமரி தானழுவாள்
(உன்னை) தஞ்சமென்று நம்பினனே தாரணியி லென்மகனே
மைந்தனென்று நம்பிமிக மாதாவும் நானிருந்தேன்
பஞ்சமா பாதகராம் படும்யூதர் கொலைப்படுத்த
வஞ்சனைக் காரர் வன்கணார்கள் காத்திருந்தார்
(தன்) நெஞ்சி லறைந்துகொண்டு நேசமரி யப்போது
சொல்லி யழுவாளே சொர்ணமுகம் விம்மிடவும்
கன்னிகையர் மடத்தில் கருணையுடன் நானிருந்தேன்
இருந்து ஜெபம்புரிந்தேன் ஏகபிதா வைநோக்கி
வந்துவான் சம்மனசோர் மங்கள வார்த்தையினால்
திடனுரைக்க அப்போது தேறி மனங்குவிந்து
ஏகபிதா வாக்கியத்தை ஏந்தி யிருக்கத்தால்
வாங்கி வணங்கிமிக வையகத்தில் நானிருந்தேன்
அநியாய பெத்திலையாம் அரும்பாவி பட்டணத்தில்
வெகுவா யுமைசுமந்து வேந்தனே நானேகியபின்
காற்றும் மழையும் கனகுளிரும் வீசிடவும்
நாதனே என்மகனே நல்லஇருள் வேளையிலே
ஆயர் குடிதனிலே (யென்) ஆண்டவனை யீன்றெடுத்தேன்
தானவனே அந்நேரம் சம்மனசோர் வந்திறங்கி
சங்கீதம் பாடி சகல தொனிமுழங்க
அங்குமிக ஆயர்களும் அடிபணிந்து நமஸ்கரித்து
தங்கமூன்று ராயருமை தாள்பணிய நான்மகிழ்ந்தேன்
இப்படிப்பட்ட எழிலுள்ள பாலகனை
(உமை) வஞ்சம்வைத்து யூதர்களும் வாதனைகள் செய்தாரே

மேவும் கொலைகாரர் வெகுவாக காத்திருந்தார்
காத்திருந்த யூதருமை கபடம்வைத்துக் கொன்றாரே
கூவியே பாலகனை கொலைபடுத்தி விட்டாரே
காந்தி முகம்வாடிகன்னியின்னு மேதுரைப்பாள்
எஜிப்த்தென்னும் நாட்டிற்கு ஏகையிலே என்மகனே
மைந்தனேயுன் புதுமைகண்டு மகிழ்ந்திருந்தேன் வையகத்தில்
தஞ்சமென்று நம்பினனே சதிகார யூதருமை
வஞ்சருமை வாதைசெய்து மடித்தாரோ என்மகனே
சதிகார எரோதரசன் சற்றிரக்க மில்லாதான்
பட்டணத்தை விட்டல்லோ பாவிகளுக் காய்பயந்து
ஏந்திக்கொண்டு என்மகனை ஏழைபர தேசியைப்போல்
பரம திருச்சுதனை பாருலகில் நான் வளர்த்தேன்
வஞ்சனையால் என்மகனை மாபாவி யானவர்கள்
கொடுத்தாரே மைந்தனுக்கு கொல்ல கபாலமலையில்
(இவரை) மரமாக செய்தாரே மாபாவி யானவர்கள்
ஆ! மகனே யேசுவென்று ஆண்டவளும் பின்னுரைப்பாள்
எல்லைக் கடங்காத என்னேசு நாதாவுனை
மூன்றுநாள் காணமல் முழுதுயர மாய்த்தேடி
காணமை லேதேடி கர்த்தனே ஜெருசலையின்
பட்டணமெல் லாந்தேடி பார்த்து வருகையிலே
பார்த்த விடமெல்லாம் பதறி வருகையிலே
கண்ட விடமெல்லாம் கதறிநான் வருகையிலே
சாஸ்திரிகள் கூட்டம் சபைகூட்டந் தனிலிருந்து
போதனைக ளாக புதுமை மொழி தானுரைத்து
ஆலயத்தி லேயிருந்தீர் அரிய திருச்சுதனே
கண்டுகளி கூர்ந்தேனே (என்) கண்மணியே பொன்மகனே
சூசையப்பர் கூடவுந்தான் சுகிர்தமொழி கள்கூறி
ஆநந்தா வேசமுடன் அழைத்துச்சென்றார் மாளிகைக்கு
இவ்விதமாய் நான்பயின்ற ஏசுவே யென்மகனே
வனத்தி லும்மை யூதர்களும் வஞ்சனைகள் செய்துகட்டி
கனக்கவே ஜெருசலையின் கள்ளனென்று தான்பிடித்து
கட்டி யடித்தார்கள் கறிகிழிந்து தான்சிதற
படியினில் செம்மறிமேல் பாயும் புலிகளைப்போல்
சட்டையையும் உரிந்துகொண்டு தந்தாரே என்கையில்
தந்தாரே என்கையில் சதிகார பாதகர்கள்
எந்தவிதம் நான் துணிவேன் என்பரனே என்றழுதாள்
தந்த பொருளுக்கே சதிகார பாதகர்கள்
இந்த கொலைசெய்ய எங்கிருந்து வந்தார்கள்
என்றுசொல்லி மனங்கலங்கி ஏகமரி தானழுதாள்
நீதி யுரைத்தவொரு நித்தியனைப் பேருலகில்



புத்திகள் சொன்னதினல் புண்ணியனை யூதர்களும்
காரணன் மேலேபெருங் கசையா லடித்தார்கள்
சேருமென்று தான்திரள செருசலையாம் பட்டணத்தில்
சேர்ந்து யூதர் அடிக்க தேவே விழுந்தீரோ
பொன்னுதிரு மேனியெங்கும் புழுதியடைந்ததுவே
முப்பொருளே யேசுவென்று மோதி விழுந்தழுதாள்
முதல்வனே யேசுவென்று உற்றுமிக தானழுதாள்
உத்தமனைப் பார்த்து ஓடவும் கண்ணீரும்
கதறி அபயமிட்டு கலங்கிகண் ணீருதிர்த்து
அடித்தாரோ வென்றுசொல்லி ஆண்டவள் பின்னுமழுவாள்
இதற்கோநா னீன்றெடுத்தேன் என்மகனே கண்மணியே
தோலும் நரம்பெலும்பும் துய்யரத்த மாய்க்கசிய
வையகத்தில் குருசெடுத்தாய் மானிடர்க ளீடேற
கையத் திருத்தோளில் நரம்பெலும்பும் தான்தோன்ற
ஐயனே குருசெடுத்தாய் அம்புவியின் மானிடர்க்காய்
இப்புவியில் ஏழைநான் எனக்கா ருதவியென்று
முத்து முகத்தையுற்று மோனமுடனேபார்த்து
பார்த்துமரி யம்மாளும் பதறியே யேதுரைப்பாள்
ஏக ஒளியாச்சே என்மகனர் திருவதனம்
(இப்போ) பாத ரசம்போலே பறந்ததோ என்மகனே
நாசி வழியாலே நல்லரத்த மிகவோட
(என்) ஐயனே முண்முடியை அழுத்தினர் உன்சிரசில்
அடித்தாரே மூங்கிலினல் ஆண்டவனே யூதர்களும்
எங்கு வைத்திருந்தாரோ இந்தமுள் ளிரும்புமுடி
தங்க முருகினதோ தணவில்லா மேனியிலே
பங்கங்கள் செய்தாரோ பாவிகளும் என் மகனை
பொறுத்து இருந்தீரோ புண்ணியனே யென்றழுதாள்
வையகத்தில் நான்வளர்த்தேன் மகனேயுன் கூந்தலதைப்
போற்றியே நான்வளர்த்தேன் பொன்னுந் திருக்கூந்தல்
தானவனை யூதர்களும் தாடி பிடித்திழுத்து
பிய்த்தாரோ நின்தலையின் போன கூந்தலைத்தான்
அச்சமறச் செய்தாரோ ஆண்டவனே யென்றழுது
மாரிபோல் கண்ணீரை மதிமுகத்தில் சோரவிட்டாள்
அறைந்ததிரு ஆணிகளும் ஆண்டவனர் முள்முடியும்
பார்த்து அழுதாளே பரிசுத்த மாதாவும்
மாதா மனங்குழறி மறுபடியங் கேதழுவாள்
ஏந்தியுன்னை வாங்கிவந்தேன் என்பிதா ஆலயத்தில்
தாலாட்டி யேவளர்த்தேன் தாரணியின் மானிடர்க்காய்
பாடுபட வந்த பரிதாபமெல் லாங்கேட்டு
அன்று மனம்நொந்து அழுதுவிழி நீரோட

வியாகுலம தாகி விழுந்தேனே யென்மகனே
தப்பித மிலாசிமியோன் தவமுனி யுரைத்தபடி
இப்பொழுதென் னேசுவை என்பாலகனைக் கல்லறையில்
(என்) அப்பனை அடக்கஞ்செய்ய ஆச்சுதோ வென்றழுதாள்

### திருச்சரீரம் அடக்கம் செய்யப்படல்

அப்போது சீஷர்களாம் அனைவருமே யோடிவந்து
அன்னையழுங் கண்ணீரால் ஆண்டவரைக் குளிப்பாட்டி
வந்து குளிப்பாட்டி மறையோன் குறிப்புகளை
அங்கமெல்லாம் சுத்திபண்ணி ஆண்டவரைக் குளிப்பாட்டி
அப்போது ஜோசேப்பும் அவருடைய அரண்மனைக்கு
ஓடியே ஆண்டவர்க்கு உயர்ந்தநல்ல வஸ்திரத்தை
கொண்டுவந்து போர்த்தி கொற்றவனுக் கப்போது
பரமன்திரு சரீரத்தைப் பரிமள தைலம்பூசி
கிருபையுற்ற ஆண்டவர்க்கு கீர்த்தி தைலம்பூசி
வெள்ளைபரி வட்டத்தில் வேந்தனையும் வைத்தார்கள்
நல்லதிரு தூம்பாவில் நாதனையும் வைத்தார்கள்
வல்ல மரிபுலம்ப மாசில்லா கர்த்தனையும்
தூக்கியே தோளில்வைத்து துய்யபரன் சீஷர்கள்
நடந்தார்க ளப்போது நாற்புறமும் சூழ்ந்துகொண்டு
சீஷர்கள் தான்புலம்பி சேசுவைக் கல்லறையில்
கொண்டேகி சீஷர்களும் கொற்றவனைக் கல்லறையில்
வைத்து புலம்பியபின் மாபாவி யூதர்களும்
தற்பரனார் கல்லறைக்கு சமைத்தபெருங்கற் பாறைதனை
கொண்டுவந்து மூடி கொற்றவனார் சீஷர்களும்
விலகிடவே யூதர்களும் வேந்தனுட கல்லறையை
மூடியே காவல்வைத்து முழுதுமே காத்திருந்தார்
அடக்கஞ் செய்தபோது ஆண்டவளும் பார்த்திருந்து
குப்புற விழுந்தழுதாள் கொற்றவனார் தாயாரும்
மார்பி லறைந்துகொண்டு மண்மேல் புரண்டழுதாள்
சீஷர்களடக்கஞ் செய்து சென்றார் விடுதிகட்கு
பெற்றவயிறு கேட்காமல் பின்னுந்தானே தழுவாள்
பாலன் றிருச்சிரசில் பதித்தாரே முண்முடியை
ஆண்டவர் திருக்கரத்தில் அறைந்தாரே ஆணிகளை
தேவன் றிருவிலாவை திறந்தாரே யீட்டிகொண்டு
கர்த்தன்திருப் பாதத்தில் கவித்தாரே ஆணிகளை
ஆண்டவரைக் கொன்றஅந்த அசடர்களைத் தான்பார்த்து
அன்னைமரி அம்மாளும் அழுதழுதங் கேதுரைப்பாள்
இவர்உங்க ளைப்படைத்த ஏகனென் றறியீரோ
மண்ணி லுமைப்படைத்த மகத்தனென் றறியீரோ



அந்நாள் சிமியோனும் ஆலயத்தில் முத்திசெய்த
தற்பரனார் ஏசுவென்று தானறியீ ரென்றுசொல்லி
எழுந்திருந்து தாயாரும் ஏகபிதா வைநோக்கி
இனியென்ன செய்வேநான் எனைப்படைத்த ஆண்டவரே
(என்று) அழுது உடல்பதறி அன்னைமரி பட்டதுயர்
வானமடங்காதே வையகமுங் கொள்ளாதே
சொல்ல முடியாதே தொல்லுலகி லெந்நாளும்
நல்லமரி மாதாவும் நாதனுக்காய்ப் பட்டதுயர்
ஏட்டி லடங்காதே எழுதவென்றால் கூடாதே
அப்போது ஆண்டவளும் ஆண்டவரைப் பார்த்தழுது
என்மேல் பிழையிருந்தால் என்தேவே பொறுத்தருளும்
என்று ஜெபம்புரிந்து ஏகனையே தோத்திரித்து
இருந்து ஜெபம்புரிந்தார் என் தாயும் சீஷர்களும்

### இரக்ஷகர் உயிர்த்தெழுதல்.

ஆதிபிதா வாலயத்தில் அருளினதோர் சொற்படிக்கு
அந்நாளில் மூத்தோர்க்கு அன்புடனே காக்ஷிதந்து
வெற்றிக் கொடியோடே மூன்றாம்நாள் தானுயிர்த்தார்
மானிலத்தில் நாற்பதுநாள் ஞான திரவியத்தை
போதித்து சீஷருக்கு போய்வருவோம் நாமெனவே
கழுகு மதமொடுங்க காத்திருந்தோர் கண்டுதொழ
மாதா மனமுவந்து மகனாரைப் போற்றிசெய்ய
ஊரெல்லாம் கண்டு உயிர்த்தவரை போற்றிசெய்ய
மாதாவும் சீஷர்களும் மனதில் கவனமுற்றார்
எப்போ வருவீரென்று என்தேவ னைக்கேட்க
நாள்தோறு முங்களுடன் நாம்வாச மாயிருப்போம்
எனவும் அடையாளம் ஏற்றகுறிப் போதுமென்றார்
உலகத்தில் வானமதில் உண்டாகும் அற்புதங்கள்
அப்போ தறிவீர்கள் (என்) அன்புள்ள சீஷர்களே
என்று ராயப்பரைபார்த் தெழில்ஞான குருவாக
சேசுநாதர் ஸ்தானத்தில் இராயப்பரை யமைத்து
புவியில்நீ ரெதைப்பொறுத்தால் பொறுப்போம் நாமெதையும்
பொறுக்கா தவைநாமும் பொறுக்க மாட்டோமென்றார்
ஏழுதேவ திரவியங்கள் எனும்ஆறு மாவரங்கள்
எழில்தனிலே ஏற்படுத்தி ஏந்தலவர் ஓதினரே
நாம்போன பத்தாம்நாள் நன்மைதரு மிஸ்பிரீத்து
தீநாக்கு ரூபமதாய் (உங்கள்) சென்னிதனில் வந்துநிற்பார்
அவர்வருகைக் கெதிர்பார்த்து அழகிய எருசலேயில்
விசுவாச பக்தியுடன் வேண்டிக்கொண் டிருப்பீரே
என்றுசொல்லி ஏகசுதன் இனியசீடர் களைப்பார்த்து

போகவேண்டும் பிதாவினிடம் பிரியமுள்ள பிள்ளைகளே
ஒலிவேத்து மாமலையின் உச்சிதனில் வாருமென்றார்

### கர்த்தர் மோட்சத்திற்கு எழுந்தருளல்

போனவுடன் எல்லவர்க்கும் பூரணஆசீரளித்தார்
(எல்லோரும்) கண்ணாரக் காண்கையிலே கர்த்தனாரோ கணமானார்
(அப்போ) மாதாவும் சீஷர்களும் மலைத்துநின்று பார்க்கலானார்
மாசற்ற ஆண்டவனார் மறைந்துவிட்டார் வானமதில்
வானவர்கள் மகிழ்வுடனே வந்தவரைப் புடைசூழ்ந்து
வழிநடத்தி ஆண்டவரை வாழ்த்தியாரா தித்தனரே
வானுலகம் சென்றுபரன் வலதுபிதா பாரிசத்தில்
வீற்றிருந்தார் விண்ணுலக விளங்கியசிம் மாதனத்தில்
மட்டில்லா தயையுடனே மண்ணோர்க்காய் மன்றாடுகிறார்
(சீஷர்) வெண்ணுடை தரித்தஇரு விண்ணவரைக் கண்டார்கள்
கண்டு வியந்திடவே கருணையோ டேதுரைப்பார்
கலிலேய நாட்டாரே கர்த்தருக்கெதிர் பார்ப்பதேனோ
மண்ணோரை நடுகேட்க (நாதர்) வருவார் கடைநாளில்
பார்த்திருந்த சீஷர்களும் பரிசுத்த அன்னையர்க்கு
தேறுதல் சொல்லியபின் சீஷர்களு மேகினரே
எருசலேயா மாநகர்க்கு எல்லோரும் வந்தபின்பு
ஏக மனதுடனே எம்பரனை வேண்டலுற்றார்

### இஸ்பிரீத்து சாந்துவானவர் அக்கினிநாக்கு ரூபமாய் எழுந்தருளிவரல்

நாதனார் சொற்படியே ஞாயிறு பத்தாம்நாள்
தோன்றினர்காண் ஞானிலத்தில் சோதியாம் இஸ்பிரீத்து
தோன்றிப் பொழிந்தாரே சீஷர்கட்கு மாவரங்கள்
ஆகாயமதில் சம்பவித்த ஆச்சரிய மேதென்றால்
பெந்தகோஸ்து தினமாம் பேர்பெரிய நாளதனில்
விசையான காற்றின்ஒலி நாட்டை நிரப்பியபின்
பிரிவான நாக்குகள்போல் பிரியமுள்ள சீஷர்கள்மேல்
சரியாகத் தோன்றிடவே சகலமுந் தானடைந்தார்
அந்நலத்தைக் கண்டஜனம் அனேகமாய்க் கூடினராம்
இராயப்ப ரெழுந்துநின்று இன்பமுட னெல்லோர்க்கும்
தப்பில்லா சத்தியத்தை தைரியமாய் பேசிடவும்
பற்பல பாஷையர்கள் பாங்கா யறிந்துகொண்டு
பத்தியுடன் ஞானதீட்சை பரிவுடனே பெற்றதனால்
(அன்று) திருச்சபையுண் டாயினது தேவனுக்குத் தோத்திரமே
சத்தியதீட்சை பெற்றவர்நாம் சாமிபிள்ளை யாகும்வரம்
(நமக்கு) கர்த்தனவர் கொடுத்ததனால் கரங்குவித்து தோத்தரிப்போம்
பத்தியுடன் அவர்சரிதை பாரினிலே பாடுதற்கும்

சொல்லு மெழுத்தும் தொடரில்லா செந்தமிழும்
பார்த்து திருத்தி பாடினபேர் பங்குபெற
போற்றியே முத்திசெய்து புண்ணியனார் காத்தருள
அறைந்த சிலுவைக்கும் அஞ்சுகா யத்துக்கும்
தோத்திரமே யுண்டாக துய்யவர்க்கு நாமடிமை
பாடுபட்ட நன்மையிலே பலனெமக்கு தந்தருளும்
ஆண்டவனார் பாடுபட்ட அரியதிரு சரித்திரத்தை
பார்த்தோர் படித்தோர்கள் பண்பாக தான்வாழி
பாடினோர் கேட்டோர்கள் பலநாளு மேவாழி
நல்ல மழைபெய்து நாடெங்குந் தான்வாழி
உற்ற மழைபெய்து ஊரெங்குந் தான்வாழி
நீடூழி வாழ்க நீதிபரன் சேசுநாதர்
ஆசீர் வாதந்தான் அனைவருக்குந் தான்கிடைத்து
மங்களமா யெல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழியவே!

முற்றும்.

✠

கடவுள் துணை

# சேசுநாதர் பட்ட பாடுகளின்மீது பாஸ்க்கு புலம்பல்

வெண்பா.

வல்லச் சிலுவை மரத்தைப் புயத்தேந்தி
சொல்லரிய வாதைத் துயரோடுங்—கல்வாரி
மேட்டுக்கு முன்னடந்த வேதபர னேயெமது
பாட்டுக்கு முன்னடக்கப் பார்.

## கால் கழுவும் புலம்பல்.

| | | |
|---|---|---|
| 1. | சீர் பரவும் நசரேசிறைவர் | ஈராறு |
| | சீஷரை முன்பாக நிறுத்தி | ஈராறு |
| | நீர்சொரிந்து கால்கழுவவும் | நமதேசு |
| | நீணிலத்திற் காகமுந்தவும் | நமதேசு |
| 2. | பேர்பெறும் செனுகுலந்தனில் | நமதேசு |
| | பேதுரை முன்பாக நிறுத்தி | நமதேசு |
| | ஆருமிதை கூறவெளிதோ | நமதேசு |
| | அருண்டோனை கால்கழுவவும் | நமதேசு |
| 3. | வேணுமென்ற தானமூன்றில் | பேதுருவாம் |
| | மெய்த்தவத்தோ னேதுமொழிவார் | பேதுருவாம் |
| | சேனைதிரள் பொருளாதியும் | அண்டரண்டம் |
| | திரைகடலு மதிரவியுமே | அண்டரண்டம் |
| 4. | நீணிலத்தில் வளர்சகலமும் | ஆகவென்று |
| | நிமிஷமதிலுண்டு செய்தநீர் | ஆகவென்று |
| | காணுமென்று வழிகாட்டினீர் | உலகிலும்மை |
| | காணாதார் மதிகுருடராம் | உலகிலும்மை |
| 5. | நித்தியமெய் ஞானகுருநீர் | நானடிமை |
| | நீதிபர நாயகனுநீர் | நானடிமை |
| | இத்தரையி லற்புதங்களும் | அருஞ்செயலும் |
| | எழில்பெறவே செய்தவருநீர் | அருஞ்செயலும் |
| 6. | உற்றசரு வேஸ்வரனுநீர் | நானடிமை |
| | ஓரணுவு மாத்திரமுண்டோ | நானடிமை |
| | கர்த்தனேநீர் கால்கழுவவும் | நீசனுநான் |
| | காசினியில் கால்கொடுப்பனோ | நீசனுநான் |

| | |
|---|---|
| 7. என்றமொழி கேட்டிறைவரும் | பேதுருவே |
| இதைஇனி மேலும் அறிவாய்நீ | பேதுருவே |
| என்றுபரா னுரைத்தமொழியை | பேதுருவே |
| இசைந்துமிக ஆகமெலிந்து | பேதுருவும் |
| 8. ஒன்றுமே யில்லாதபோதே | எனைப்படைத்த |
| உடையோனே யுமதுகரத்தால் | எனைப்படைத்த |
| இன்றெனது கால்கழுவவும் | நான்பாவி |
| ஏற்பதுவும் நீதியல்லவே | நான்பாவி |
| 9. புத்தியில்லாத வீணன் | நான்துரோகி |
| பொருதிமனந் தெளிந்தேனையா | நான்துரோகி |
| எத்திசையும் படைத்தஆதி | ஆண்டவரும் |
| இராயப்பர் முகத்தைநோக்கி | ஆண்டவரும் |
| 10. இத்தரையில் கால்கழுவவும் | நானிதற்கு |
| இசையேனென்றால் என்கூட | நீயிருக்க |
| பத்தியுடன் பங்குமுனக்கு | இல்லையென்ற |
| பரமனுரை கேட்டவுடனே | இல்லையென்று |
| 11. ஆண்டவரை போற்றிசெய்து | பேதுருந்தான் |
| ஆவிநெடு மூச்சுநிறைந்து | பேதுருந்தான் |
| இன்றெனது தேகமுழுதும் | நீர்கழுவ |
| நேசமெனக் காகுமையனே | நீர்கழுவ |
| 12. தீங்குபெற கால்கழுவினால் | உலகிலின்னம் |
| தீராத பவதுரோகமே | உலகிலின்னம் |
| பாங்குபெற கால்கழுவவும் | போதுமிது |
| பாதக துரோகிக்கின்னமும் | போதுமிது |
| 13. ஆங்குகர்ம மாகுமெனவே | சீஷர்களின் |
| ஆறிருபேர் கால்கழுவவும் | சீஷர்களின் |
| தேங்குபுக ழாதிசுதனும் | தமதுடைய |
| திருச்சடையை தொட்டபின்பு | தமதுடைய |
| 14. தேற்றமுட னீராறுபேர் | அப்போஸ்தலமார் |
| சீரமைந்து நாளும்நாளும் | அப்போஸ்தலமார் |
| தாட்டிக மாகநீங்கள் | என்னையிப்போ |
| சற்குருவாய் துதிக்கவெனவும் | என்னையிப்போ |
| 15. நாட்டமுடன் ஆண்டவரேநீர் | ஜெபந்தொழுகை |
| நாட்டினது சத்தியமெய்தான் | ஜெபந்தொழுகை |
| முந்தவுங்கள் கால்கழுவியும் | நான்வணங்கும் |
| முயற்சிகளைக் கண்டுணரவும் | நான்வணங்கும் |



| | |
|---|---|
| 16. பந்தியென்னோடுண்டு முங்களில் | ஒருவனென்னை |
| பகைஞருக்கு காட்டுவானென்றார் | ஒருவனென்னை |
| எந்தன்வகை யனுசரித்தால் | இகபரத்தில் |
| என்னோடென்றும் வாழ்வீரென்றார் | இகபரத்தில் |

## தாழிசை

அழகுள்ள பூங்காவனந்தனிற் பரனார்—அன்புள்ள சீஷரோ டேகி — ஆதியை யிறைஞ்ச விருமுழந்தாளிட் — டணிகரங் குவித்துவானோக்கி — சுழல்விழிநீர்கள் ஆறெனப்பெருகத் — துய்ய தோர் முகம்படத் தரையில்சோரியாய் வேர்வை தோய்ந்திடத் தேகந்துயருறத் துதித்தபின்னெழுந்து — மழலைபோ லுறங்குஞ் சீஷரை யெழுப்பி – வன்மிகள் முடுகு மவ்வேளை – வழுத்தியே தய வாய் விழித்தவரோடு — வனத்தைவிட்டேகு மந்நேரம் — வழியது காட்டிச் சீஷனுங்குருவே வாழியென்றுமை முத்தங்கொடுக்க — மவுனமாய் நின்றுபவ இடர்தீர்த்த — மரிதரு மேசுநாயகனே.

## புலம்பல்

1. வந்தார் வனமடைந்தாரிந்த வனத்தி லெட்டுப்பேரை
வைத்தார் பகையோர்கள் வரும் வழிபாதங்கருதி

2. சிந்தா குலப்பேதுருவும் ஜெபதேசிறு மகவும்
சிறப்பாகிய மூவோர்களே திரும்ப வோர்ஸ்தலத்தில்

3. முந்தாக வேதியருடன் முனிப்பேதுருஞ் சுவானும்
மொழிந்த மொழிதவறி கண்கள்மூட அங்குநணுகி

4. அந்தமண விருந்தபின்பு அகன்றோர் ஸ்தலத்தேகி
ஆதிபிதாத்தனை வேண்டியே அரிய ஜெபம்புரிந்தார்

5. ஓதித்திகழ் ரெண்டாவது வேண்டித்தொழு திறைஞ்சி
விழுந்தே யெழுந்திருந்தே அந்தமெய்வே தனினிடமாய்

6. சோதித்திரு மகனார் படும் துயரானதுந்தீர
துணிவாய்கண்கள் மறையாமலே தூங்காதிரு மென்றார்

7. வேதகுரு ரெண்டாவது விசை யந்தியத்தில்
விரைந்தே யெழுந்திருந்தே அந்தமெய்வே தனினிடமாய்

8. ஆதிமகன் வரும்போதுகண் அயர்ந்தோர்களை யெழுப்பி
அயர்ந்தார்கொஞ்சம் சடுதிமட்டு அருமைப்படு மெனவே

9. தூணும்சிரசின் முண்முடி தோள்மேல் பாரகுருசும்
துஞ்சுமடை யாளந்தன்னை சுதனுங்காண நின்றார்

10. வேணும்படி சொல்மறந்தே வேதைப் படுமெனவே
விணைதீர்ப்பது இதுவேதனை சுதனுங்காண நின்றார்

11. காணும்படி கண்டீரதை கடினம் பொறுப்பதற்கே
கர்த்தாவேயுன் கருத்தே யெல்லாம் கருதுமுறையோதே

12. பூணும்முடி புனைந்தார் சென்னில் பொங்கிசிலரெனவே
பொழிந்தார் துயில்விழுந்தாரதில் பூண்டருளி நின்றார்

## தாழிசை

பிழையிலாப் பொருளை யூதர்கள் வளைந்து பிடித்தவன்கயிறு சங்கிலியால் — முன்னுமுன் பிசகாதிருகரம் வரிந்து பிலத்தடித் திழுத்துமே நடத்தி — விழநிலமீதி லிரங்கிடாதும்பால் — விபரிதக் கோட்டிகள் விளைத்து—வேதியனனைசெனுங் குருகைப்பாஸ்—வீட் டினிற் கூட்டிப்போய் விடுத்து — பிழையும் மேற்றாற நீரெதிர் மொழிய பிலத்தினலோங்கி யங்கொருவன் — போந்துமையறை யச் சோர்ந்துமேநிலத்தில் வீழ்ந்ததி சோபமுற்றேதான் — மழை யெனப்பொழியும் பனியினில்மறித்து — வஞ்சகர் விழிமறைத் தடிக்க மவுனமாய் நின்றுபவ இடர்தீர்த்த மரிதரு மேசுநாயகனே.

## புலம்பல்

1. வளரும் பூங்காவனந்தனில் வந்துநீர் முழந்தாள் நின்று
நேயப் பிதாவை பார்த்து நின்றுமன முருகி

2. துய்ய பிதாவை நீர்தான் சொன்னபடியாய் பூசை
முகிக்கவே யெனக்கு பெலன்தாரும் என்றுநீர் வேண்டி

3. காவினில் கலங்க சேசு கலக்கமுற்றெழுந்து தரையில்
நணையவே யுதிரம் வேர்த்து வெள்ள நீரோட

4. அப்போது சீஷன் உம்மை அகமுன்றிப் பிடிக்கமெத்த
வொப்புர வுடனே பூங்காவில் ஒருநாள் சென்று

5. சென்றங்கே சீஷன் கர்த்தரை கட்டியே முத்திசெய்து
காட்டியே கொடுக்க யூதர்க ளனைவரும் வந்து

6. திட்டமதாக பிடிக்க சேசுநச ரேசை இறுக்கி
கட்டவே கயிறு சங்கிலி கயி றெடுத்தனரே

7. சாட்டையுங் கயிறும் சங்கிலி தனத்தா லிறுக்கிமெத்த
பாடுகள் படுத்த பொல்லா பாதக யூதர்

8. முதுகது நடுவில் இருபுறம் முழந்தாளதிலே ஈனர்கள்
பதியவே வரிந்து இருபுறமும் பழுவெனும் பொடித்து



9. பின்னுதை யுதைத்து இருபுறம் பின்னெனும் பொடித்து நாணக்
கன்னத்தி லடித்து பொல்லா கள்ளனைப் போல

10. கட்டியே யிறுக்க கர்த்தரின் கண்விழிப் பிதுங்க இறுக்கி
கெட்டியாய்ப் பிடித்து கொடுபோய் கம்பீரத் துடனே

11. கைப்பாசென்னும் அவன் மாமன் கட்டியேதுரோகி ஆனஸ்
மெய்யாக மேவும் அரண்மனை வீட்டினில் சென்றார்

12. இழுத்தங் கேகுருவை ஆனசுக் கெதிர்கொண்டுபோக சற்றும்
இரக்க மில்லாமல் ஈனன் அற்புத குருவை

13. மெய்ப்புட னுனது வீணன வார்த்தைகளெல்லாம் நாளும்
எல்லோரு மறிய போதக வியல்புட னுரைத்தாய்

14. வல்லவன் பலத்தால் சேசு மனந்துணிந்ததினல் யூதர்கள்
பொய்யனே யுனது வுடலைப் பிளந்திட வேணும்

15. முன்னோர்கள் ஸ்தலத்தில் ஆயைம் முதிந்ததை யிடித்தமூன்று
நாளிலே முகிப்போம் என்று மூர்க்கங்கள் செய்தாய்

16. கொற்றவனெம் பிரதோர் கூறிய கடுங்கோபமாகி எக்க
ளித்தாண்ட பேர்க்கும் நீரிப்போ ராசநீயல்லவோ !

## தாழிசை

வம்பராம் யூதர் வளைந்துமைக் கொடுபோய் மன்னவன்பி லாத்து முன்விடுத்து — மாகொடிதான தூறும் மேற்புகல மன் னனுந்த னருகழைத்து—வெம்பியேசினந்து அரசர் கோனீயோ— விரித்தெனக் குரைத்திடுமெனவே வேதனே அவன்முன் நீதியாய் மொழிய வெஞ்சினக் கொலைஞர்க ளெழுந்து—கும்பல் சூழ்கலிலே பாடு இவ்வளவாய்க்—குழப்ப மிட்டவனெனக் கூவ—கூட்டியே பிலாத்து எரோதை பாலனுப்ப கொடியவன் கண்டுமை மகிழ்ந்து மங்கிடாச்சோதி மைந்தனீயானல் — மாநவஞ் செய்யென அவன் முன் வாய் திறவாமல் மவுனமாய்நின்ற மரிதருமேசு நாயகனே.

## புலம்பல்

செப்பரிய பூங்காவில் சேசுநாதர் சீஷருடன் பிரார்த்தனையை
[யோதுநேரம்

ஒப்பரிய திருமேனி யுதிரமாக ஓடவேதுயர் மிகுந்தீர் ஒப்பில்
[லானே

கைக்கூலி வாங்கியே தான்யூதன்கையில் காட்டியே முத்தி செய்
[தான் ஸ்க்கரியோத்தென்னும்

செப்பும் செம்புருவைமேலே சினந்துபொல்லா யூதருந்தான்
[திரண்டு கொண்டு

கட்டியடித்தே யிழுத்தே கடினமாக கசடன் பொல்லா ஆனஸ்
[முன் காட்டினர்கள்

நீதான அனுசுகை பாசுந்தானும் தீர்வையிட்டான் எண்ணரிய
[அடி அடிக்க
செப்பரிய கல்தூணில் யூதரும்மைச் சேர்த்திறுக்கிக் கட்டியே
[தான் கடினமாக
அய்யாயிரஞ்சின்ன அடி அடிக்க அங்கமெல்லாம் பிய்ந்தெலும்பு
[நரம்பு தோன்ற
சோதி திருத்தலையின் முள்முடி யொன்றைத்தான் சூட்டவே
[துயர்மிகுந்தீர் தூயாநேயா
மாது கன்னிமரியம்மாள் அழுதுசோர வானவனேயுமை யூதர்
[வர்மமாக
கொட்டக்காரர் உமது திருத்தோள்மீது கொடுமையாய்ப் பெரிய
[தொரு சிலுவைதன்னை
நிஷ்டூரமாய் சுமத்திஜெருசலையில் நெடுந்தெருவிலே சென்றார்
[நேயா துயா
கபாலமலை மேல் குருசில் கிடத்தியும்மை கசடர்செய்யும் பாத
[கந்தான் கடினமாக
அறையவே உயிர் விடுத்தீர் அனாதிநாதா ஆண்டவரே எங்களுக்
[காய் குருசில்மாய்ந்தீர்

## தாழிசை

பாதகனிரோதேஸ் வெண்டுகிலணிந்து பயித்தியம் பிடித்த தென்றியம்பி — பகர்பிலாத்திடமே யனுப்பிடவழியில் பரமனைச் சேற்றினலெறிந்து சோதிசைப் பிலாத்துமுன் விட அவனும் சோரனும்பரபாசைக் குறிக்க துற்சனரெழும்பி சத்தமதுயர்த்திச்— சுருதியைச் சிலுவையிலறையத் தீதர்கள் புகலத் தூணைதிற் சேர்த்து சிலவடிக்கே விடைகொடுக்க சினத்துடன் கசைவார் சவுக்கு சாட்டையினால்—சேர்ந்தவர் மாறவேதேகம் மாதிருநரம்போ டெலும்புகள் தோன்ற—வாரிபோற் குருதிகளோட வஞ்சகர்யாம் செய்பிழை பொறுத்தாள்வாய்—மரிதரு யேசு நாயகனே.

## புலம்பல்

1. செய்யோனே யுத்தமனே யேசுநாயகா யூதரும்மை
அய்யாயிரஞ் சின்ன அடியடித்து மாதுயரம்
2. மாதுயரம் பட்டீரோ மகனே என்மாதாவும்
சின்னமார் யூதருக்கு செய்த உபகாரமிதோ
3. உபகார மோகுருசில் உற்றதொரு காயகற்கு
நவமான கல்தூணும் நாயகற்கொரு முள்முடியாம்
4. முள்முடியுஞ் சங்கிலியும் மூங்கில்தடி கேடயமும்
கட்டியக் கயிறுகளுங் கசை பிரம்பு வாருகளும்
5. தம்பட்டம் வல்லாரி தவில்முரசு நேரிசமும்
துண்டு தடிகளுடன் சொல்லவொண்ணா ஆக்கினையும்



6. சிலுவை தனைச் சுமந்து சென்றீரோ என்கோவே
கோவே குருசிலும்மைக் கொன்றாரோ யூதர்களும்
7. உருகி மனங்கலங்கி உயர்ந்த திருமாமரியும்
அழுதழுது வழிநெடுக அன்னைமரி சோர்ந்திடவே
8. ஐயையோ மகனே யென்று அலறி விழுந்தழுவாள்
அழுவாள் நிலம்பு ரள்வாள் ஆமகனே யேசுவென்பாள்
9. மைந்தனுக்காய் ராசகன்னி வலுயூதர் பட்டணத்தில்
வந்து நின்று துயரத்துடன் வாய்திறந்து ஏதுரைப்பாள்
10. என்பிறப்பே தங்கையரே யித்தெருவின் மானிடரே
மற்ற பரதேசிகளே வழிபோகு மானிடரே
11. அப்பியரே என்னுயிராம் ஆண்டவனை வானவனை
தப்பிதங்க ளில்லானை தள்ளிக்கொண்டு போனாரோ
12. இறப்பவர்க்கு உயிர்கொடுக்கும் என்மகனை காணீர்களோ
கண்டீரோ என்மகனை கானகத்தி லுள்ளவரே
13. என்று மரியாள்கேட்க வேதுரைப்பா ரங்குள்ளோர்
நின்றலருங் கன்னிகையி னோர்முகத்தை தான்நோக்கி
14. கண்டோமம்மா அவர்துயரை கனத்ததொரு குருசுடனே
வல்லபரன் றிருத்தோளில் வருத்தமுடன் குருசேந்தி
15. பழிகார யூதர்களும் பரம திருச்சுதனை
பழுதுபட மேனியெல்லாம் பட்டகாயந் தோன்றிடவே
16. அந்த மொழிகேட்டு அலறி விழுந்தழுவாள்
வன்னத் திருமரியாள் மண்ணில் விழுந்தழுவாள்
17. உருகி மனங்கலங்கி உயர்ந்ததிரு மாமரியும்
கண்கலங்கி தானழுதாள் கர்த்தனுட தாயாரும்
18. என்மகனே கண்மணியே என்னுயிரே என்றலறி
அலறி விழுந்தழுவாள் அன்னை கன்னிமா மரியும்
19. நீதியில்லா யூதர்கள் நெடுந்தெருவே கொண்டுசென்றார்
பார்த்தோமம்மா அவர்துயரம் பதறுதம்மா எங்கள்மனம்

## தாழிசை.

கண்டுமைப் பிலாத்து பாதகாடித்த கசையடிவால் மனமெலிந்து —காட்டியேமனிதன் தன்னைநோக்கெனத்தான் கருத்தினிலச்சமுற்றியம்ப—கொண்டு வெம்பகைஞரோர் மொழியாகக் குருசினிலறையெனக் கூவக் கொடுத்தனன் விடைதான் பிடித்தவர் கொடுபோய் கொதித்துடன் மேட்டினி லிருத்தி—புண்படச் சிரசில் முண்முடிபொருத்தி பொற்கரந் தன்னிற்கோல் கொடுத்து—

புகழ்ந்துமையிறைவா .வாழியென்றடிக்கப் பொங்கிசெந்நீர் விழி மறைக்க—மண்டியேகுருசைப் புயந்தனிலேற்றி வளம்படு வீதியில் நடத்த—மகிழ்வுட னடியோர் பவமதைச் சுமந்த மரிதருமேசு நாயகனே.

## தேவமாதா வெரோணிக்காள் புலம்பல்

இராகம் ; தாளம் ஜம்பை.

அம்மம்மா என்னம்மா அன்புள்ள மரியம்மா
அருமையுள்ள மகனையூதர் அடித்துக்கொண்டு போனார்கள்.

தேவதாயார்

போறவித மேதம்மா புகழ்பெரிய வெரோணிக்காளே
பொல்லாத யூதர்கையில் வதைக்க வந்ததேது?

வெரோணிக் அம்மாள்

வந்தவகை கேளுமம்மா வகையில்லா ஸ்கரியோத்து
பிந்திவந்து முத்திசெய்து காட்டிக்கொடுத்தானும்.

தேவதாயார்

கொடுத்தபின்பு யூதர்களும் கோபமுடனே மகனை
பிடித்தடிக்க வந்தவிதம் யானறியேன் என்மகளே

வெரோணி

மகளே யென்று கேட்கும்வகை யானுரைப்பேன் கேளுமம்மா
தலமாளும் கைப்பாசு இடந்தனிலே சென்றார்.

தேவதாயார்

சென்றபின்பு கைப்பாசு செய்தகுறை யென்னம்மா !
நீதியுள்ள என்மகனை நிஷ்டூரம் செய்தாரோ !

வெரோணி

செய்தவகை கேளுமம்மா சித்தமுள்ள வுன்மகனை
நகராளும் பிலாத்தரசன் நானறியே னென்றான்.

தேவதாயார்

என்று அவன் சொன்னதின்பின் ஏழை யெந்தன் மகனார்
நலம்பெருகும் ஜெருசலேயில் வீதி வந்ததேது ?

வெரோணி

ஏதென்று கேட்டதற்கு ஏதுயான் சொல்வேனம்மா
மாபெரிய ஏரோது வதைக்க வுத்தரம் கொடுத்தான்.



தேவதாயார்

கொடுத்தபின் யூதர்களும் கோபமுடனே மகனை
தளர்ந்து பூமியில்விழ ஜாரி அடித்தாரோ !

வெரோணி

அடித்தபின்பு முண்முடியும் அதற்கேற்ற வஸ்திரமும்
பிடித்த மூங்கில்தடியால் அடித்தாராம் அம்மா.

தேவதாயார்

ஐயையோ என்மகனே அழகுள்ள கண்மணியே
(உன்) முத்துமுகம் வேர்வை யதனால் ரத்தங்களாச்சோ !

வெரோணி

ஆச்சுதெனவே யுரைக்க அருமையுள்ள மரியம்மா
ஆக்கினைசெய் அசடன்கையில் அளித்தாரும் மகனை

தேவதாயார்

வரைந்த வேத வெழுத்திதுவோ வடிந்த ரத்தக்கறையோ
மகனே யுந்தன் திருநேத்ரம் மறைந்த தென்னவிதமோ !

சந்தக்கலித் தாழிசை.

கண்ணினாலு மனதாலு மென்றனிரு காதினாலும் நினைவாலும் வாய்—கையினாலு மறிவாலு முற்றிடு கருத்தினாலும் வெகுபாரமாய்—பண்ணினேன் றினமும் கோடிகோடிவதை பாரிலிது தொழிலாகவே—பாவி பாவியெனப் பேர் படைத்த வெகு பஞ்சபாதகனா னாலுமோ—குண்ணுமோர் குருசில் நின்ற கள்ளனைநீர் கொண்டணைக்கவர வில்லையோ—கொடியயூதர் வினைதீர்க்க ஐயனே நீர் கூவிவேண்டிடவு மில்லையோ—எண்ணினாலு முடியாதுமா பவமியாவுமோருருவ பேதையாம் எளியன்யான்செய் பவமெலாம் பொறுத்தருளும்—ஏசுநாயகசுவாமியே.

புலம்பல்

இராகம் சாமா.

பூவிலாதிசெய் தீவினையால் பூங்காவில் சென்றீரோ
குவித்தீரோ வெயர்த்தீரோ மகனே புண்ணியனே புண்ணியனே
இந்த மண்ணில் மரிக்கவே மனதாகினீர்
முப்பதுவெள்ளி காசுக்கோவும்மை விற்கவே வளர்த்தேன்
அமிர்தங் கொடுத்தேன் முத்தங்கொடுத்தேன் மகனே
புண்ணியனே புண்ணியனே இந்த மண்ணில் மரிக்க மனதாகினீர்
மூட்டியேஜாடை காட்டியேயூதாஸ் முத்தமே கொடுக்க
யூதர்பிடிக்க கயிறு கொடுக்க மகனே மோனமாய் மோனமாய்

அங்கு மவுனமாய்நின்ற தவப்பொருளே நீர்
போட்டியாய் பகை மூட்டியே குற்றம் சாட்டலானீரோ
தடுத்தீரோ வுரைத்தீரோ மகனே போதகா போதகா
அங்கு பொறுமையாய் நின்றீரோ
அன்னாஸ் முன்மொழி சொன்னதால்கன்னத்தறைய விழுந்தீரோ
தணிந்தீரோ தணிந்தீரோ மகனே ஐயனே ஐயனே
ஞான துய்யனே இந்த வையமீதினில்
கோரயூதர்கள் கற்றூணில் சேர்த்தும்மை கொடுமையாயடிக்க
சோரிதெறிக்க அங்கம்பதைக்க மகனே கொண்டீரோ மனங்
கொண்டீரோ கோதில்லா புதல்வா
சென்னிமுள்முடி சூட்டியே கையில் திகிரியை கொடுக்க
அண்டந்திகைக்க வாங்கியடிக்க மகனே சீலனே சீலனே
இளம்வாலனே நரர்க்காக வாதைபூண்டீர்
சாட்டை சவுக்கு சடைமுட் பிரம்பால் சரீரநைந்திடவே
பதிந்திடவே சிதைந்திடவே மகனே சாபமோ சாபமோ
நரர்பவமோ தேவ கோபத்துறை யேற்றீர்
பாரக்குருசை புயத்திற் சுமத்தி பங்கமேபடுத்தி சாலைக்கடத்தி
மலைநடத்திமகனே பாவிபோல் பாவிபோல் பெருந்துரோகிபோல்
கொல்கத்தா வழிநடந்தீர்
வழியில் போவார் வருவார் நின்றும்மேல் வசைகள் கூறினரோ
இகழ்ந்தனரோ அகழ்ந்தனரோ மகனே வானவா வானவா
மோனஞானவா வுன்னை யெப்படிச் செய்தார்
வழியில் சீமோன் சிமியோனை யூதர் வம்புசெய்திழுக்க
குருசெடுக்க தோளில் சுமக்க மகனே வானமே வானமே,
இந்த ஞானபானுக்கேனிந்த வாதை
பாசக்கயிறும் சங்கிலிகொண்டும்மை பற்றியேயிறுக்க
காயிறுக மனமுருக மகனே பாவமோ பாவமோ
யூதர் கோபமோகொடு போகும் வழியில்
வாலசூரியப் பிரகாசம் போன்றநின் வதனமுங்கருக
வேர்வையொழுக மாதசமுக மகனே வல்லவா வல்லவா
எந்தன் வல்லவாகொடும் புல்லர்செய் வதையால்
வஞ்சயூதர்கள் அஞ்சிடாமலே துஞ்சிட வதைக்க காலாலுதைக்க
சிறைபிடிக்க மகனே வாசனே வாசனே
எந்தன் நேசனே யூதர் தூஷணிக்கலானீர்
உந்தன் தையலில்லாத சட்டையை உரிந்திட இழுக்க காயங்கள்
திறக்க வாரிபோல்பெருக மகனே உற்றதோர் உற்றதோர்
மனம் பற்றுதே வயிறுபற்றுதிந்நேரம்
குருசினி லங்கம் குலுங்க கரங்கால் கொடுமையாய் துளைக்க
ஆணிஅடிக்க ஆவிதுடிக்க மகனே கொற்றவா கொற்றவா
ஞான முற்றவா உன்னைவிட்டுப் பிரிந்தேன்



கள்ளரிருவரோ டொருவனாய் கொலைகளத்தில் நிறுத்திகொலை
படுத்தி தலையழுத்தி மகனே காதகர் காதகர் பெரும்
பாதகருக்காக ஆகியை வேண்டினீர்
கசப்பு புளிப்பும் கலந்த ரசத்தை கடினமாய்க் கொடுக்க
நாவால்சுவைக்க குறைபடிக்க மகனே காரணா காரணா
பரிபூரணா கிருபை வாரணா ரூபா
வரையில் பிறந்து வரையிலுறைந்து வரையினில்மாண்டு
துயர்பூண்டு சிறைமீண்டு மகனேமரித்தீரோ மரித்தீரோ
உயிர் கொடுத்தீரோ பான்காத்தினில் குமாரா
ஒருகண்குருடன் உன்விலாவை யீட்டியால் ஓங்கியேதிறக்க
குன்றுகள்பிளக்க அந்தகன்விழிக்க மகனே உத்தம உத்தம
பரிசுத்தனே வயிறுபற்றுதென் செய்வேன்
அண்டபிண்டமு முண்டு செய்தநீர் அரியகுருசினில்
ஜெருசலையில் ஒருமலையில் மகனே அடக்கவே அடக்கவே
மரித்தடக்கப் பட்டீரோ கொடுமையென்னசெய்வேன்
ஐயாயிரம்பேர்க் கமுதிட அற்புதம் புரிந்தாய் ஆழியில்
நடந்தாய் அருள்கொடுத்தாய் மகனே அப்பனே அப்பனே
உனையெப்போ காண்பேனோ முப்பொருள் நாதா
அரிய தவஞ்செய் தோர்ந்திட்ட மங்கை அனுகியே
துடைக்க ரூபம்பதிக்க மனந்துடிக்க மகனே அற்புதா
அற்புதா உனை எப்போ காண்பேனோ சற்பிரசாதா.

## சந்தக்கலித் தாழிசை

அத்தனே யுமது மக்கள் செய்தபிழைக் காகவே கடினமாயிரு—
அடிகரம்பழு விலாவிலும் பெரிய வைந்துகாய துளையாகவே—தைத்த
பாதமதி லோடுரத்தமுமுன்- றலையில் முண்முடி யழுத்தியே—தாக்கு
நோவு மெழுபத்திரண்டு துளை தன்னிலோடிய செம்பாலுடன்—
உற்றதோர் சிறியபுண்களாலுமிக ஓடுரத்[illegible]டலெல்லாம்—உறை
யும் வெள்ளமென ஓடநின்றதனை [illegible] நீக்கியாள்—
எத்தனமெனுங் குருதியான தி[illegible]துளியிலே—
எள்ளம்மாத்திரம் விழித்தெளி[illegible]மேசுநாயக சுவா[illegible].

## கிறீஸ்துவின் பாடுகளைக்குறித்து மன்றுடும் புலம்பல்

இராகம் மஞ்யாம் ; திரிசுர தாளம்

பல்லவி

1. ஐயா நான் பாவி உந்தன் [illegible]சம் வைத்தருள் சேசு[illegible]வ
பூங்காவில் துயர் மிகுந் தேங்கி ய[illegible] சோர்ந்து
புலம் பினீரதை நினைந்து அடியேன்

சாங்காலம் விசுவாச நம்பிக்கை நேசத்தில்
தவறு திருக்கவருள்வீர் ஐயா

2. கற்றூணில் கசையடிபட்டு பரதவித்த
கடின துயரை நினைந்து அடியேன்
பற்றற உலகம் பசாசு சரீரத்தை
வெற்றியடைய வருள்வீர் ஐயா

3. பாவியே யேரோதுமக்குப் பரியாசமாய் பீற்றல்
பட்டை யுடுத்தினனே அடியேன்
பூவின் புகழ்ச்சியெல்லாம் சாவின் புகழ்ச்சியென்று
புத்தியடைய வருள்வீர் ஐயா

4. கள்ளரோடு நிறுத்தி கள்ளமனப் பிலாத்து
கையைக் கழுவி விட்டானே அடியேன்
கள்ளர் பதிதர் வலைக்குள் ளாகாதபடிக்கு
கருணை மழையை பொழிவீர் ஐயா

5. நீளுங் குருசதனை தோளில் சுமந்தயர்ந்து
நிலத்தி லிடறி விழுந்தீர் அடியேன்
மாளு மட்டு முலக மாயைகளில் மனது
மயங்கா திருக்க வருள்வீர் ஐயா

6. பெற்ற தாயெதிர்வரக் கட்டியணைத்து வாயால்
பேசக்கூடாம லழுதீர் அடியேன்
பெற்றதாய் தந்தை மக்கள் பெண்டீர் பலபலகால்
பிசகா திருக்க வருள்வீர் ஐயா

7. தோலை யுரிப்பதுபோல் தூசு உரியப்பட்டு
சுத்த நிர்வாண மானீர் அடியேன்
வாலதுற்குண மெல்லாமகற்றி நற்குணம்பெற
வந்துகண் பார்த்தருள்வீர் ஐயா

8. கனத்த சிலுவைதனில் கிடத்தி ஆணியடிக்க
கை காலை நீட்டிக் கொடுத்தீர் அடியேன்
மனதாலும் வாக்காலும் மலரடி மறந்திடா
வரங்களை மிக வருள்வீர் ஐயா

9. குருசி லறையப்பட்டு ஏழுவார்த்தைகள் கூறி
கொடுமையாய் ஆவிவிடுத்தீர் அடியேன்
மரணத்தறுவாயிலும் சேசுமரிசூசையென்று
மறவாதிருக்க வருள்வீர் ஐயா

10. குருடனொருவ னீட்டிகொண்டுமது விலாவை
குத்தித் திறந்து விட்டானே அடியேன்



திரு இருதயத்திலே தின மிளைப்பாறிட ஐயா
சித்தம் புரிந்தருள்வீர்

1. மண்ணும் விண்ணும் நடுங்க மடிமேலுமைக்கிடத்தி அடியேன்
மாதா அழுது நொந்தாளே
விண்ணுடுசேருமட்டும் எண்ணி என் வினைக்காக ஐயா
விம்மியழுக வருள்வீர்

### தாழிசை

கரமொடுபதமுங் கழுவெனுங்குருசில் கதித்த மூவாணியா லறைந்து—கள்ளர்களிருவர் நடுவினில் நாட்டக் கர்த்தனேயறைந் தவர் பிழைக்காய்—பரமதைநோக்கிப் பிதாவுடனிறந்தீர் பழமை யோரெழுதிய மொழியின்—படிமுடிந்தது வென்றுத்தும முமது பாலினிற் சேர்ந்திடுமென்றீர்—வாமுறும் வலப்பால் சோரனுக் குமது வானராச்சிய மதையளித்து—மகிழருளப்பர்க்குன தனைதாயாய் வழுத்திபின் தாயழுதலை—மாவிதனத் தோ. ..ாவி விட்டிறந்த மரிதரு சேசு நாயகனே

---

## சேசுநாதர் கபாலமலைமேல் சிலுவை சுமந்துபோகிற பாலைவனச் சருக்கம்.

### ஏலப் பாட்டு.

ஏலேலோ-ஏலேலோ-ததய்யா-ஏலேலோ

சரணம்.

1. மலையடியில் சேர்ந்தவுடன், பரம
வளமிகுந்த நாயகனை
தலையணிந்த முண்முடிமேல், யூதர்
தாங்களுமே யடிக்க

முடுக்கு

பல பல வெனக்குருதி பாய்ந்தங்கேயோட
பார குருசால் பெருங் களைவந்து மூட
சில வகைகளோடு திகைத்து நின்றாட
தீக்ஷண்யமாகவே செங்குருதியோட
நீசர்கைவார் பிரம்பா லவரை ஜாட
நெஞ்சிதங்கா கொலை வஞ்சகர் கூட
மன முருகிய தேவ மாதாசிவாட
மரியமத லேனளும் வணங்கி திகைப்பாட—ஏலேலோ

2\. வலுவுடைய யூதரெல்லாம் கூடி
வர்ம மதை மனதிலெண்ணி
சிலுவை யதை மேல் ஏற்றி கரத்தை
சேர்த்திறுக்கி தான் பிணைந்து

முடுக்கு

பலமாகவே நாலு யூதரு முனைந்து
பாரான வந்தனையே சீறியே சினந்து
கலக முடனே எங்கள் ஊரில் திரிந்து
கர்த்தருட மகனென்று அற்புதஞ் செய்து
தலமதிலே யீராறு சீஷரைத் தெரிந்து
தாய் தந்தை சூசைமரி தன்னைப் பிரிந்து
உலக நடுநீர்வைக்கு வருகுவேனென்று
ஒய்யாரமாய் சொன்ன அய்யனே என்றார்—ஏலேலோ

3\. சிகர மதின் மீதேற கனத்த
சிலுவை யொடு பாரமதால்
நகரமதிர தாழ்விழுந்து சடலம்
நடு நடுங்கவே களைத்தார்

முடுக்கு

அக மகிழ்ந்தே யூதர் கெக்கலிகொட்டி
ஆரவா ரங்களொடு மார்புஜம் தட்டி
தகையறவே சென்னி கூந்தலை நெட்டி
தாவியே பிடித்து கழுத்துதனை நெட்டி
மகிப னென வோராது சென்னியிற் குட்டி
வல்லகை வல்லயத்தால் நோக முட்டி
புகல வொண்ணு வாதை பொறுமை காட்டி
பொங்க முடனோட்டினர் கபாலமலைமேட்டில் —ஏலேலோ

## முள் முடியின்மீது புலம்பல்

1\. பரம ராசனே (சுவாமி) பரியாச ராசனாய்
தரியலருமை வதைக்க சம்மதித்தீரே
2, முள்ளினால் பின்ன (சுவாமி) ஒருமுடியதை சிரசில்
துள்ளத் துடித்திட வைத்து துஷ்டர் அடித்தனர்
3\. ஒட்டை நாற்காலி (சுவாமி) மேல் உட்காரவைத்து
கூட்ட நாய்களே கையில் கோலுங் கொடுத்தனர்
4\. பீற்றல் போர்வையை (சுவாமி) இட்டு நீசபாவிகள்
வாழ்த்து ராசனே என்று வணங்கி யடித்தனர்



5\. முள்ளின் கூர்மைகள் (சுவாமி) தலை மூளை மட்டுக்கும்
உள்ள விழியிலும் பாய்ந்துருவிச் சென்றதே
6\. உந்தன் சிர செல்லாம் (சுவாமி) மிகநொந்துதோ பரனே
சொந்த தாய் கண்டால் என்ன துடி துடிப்பாளோ
7\. ஐயனே நீர்தான் (சுவாமி) அரியபாடுபட
செய்த குற்ற மென்ன சொல்லும் தேவபாலனே
8\. வாசனே யும்மை (சுவாமி) மிகவதைத்த யூதரை
நாச மாக்காமல் விட்ட நியாயமேதையா
9\. இராச ராசர்க்கும் (சுவாமி) முடிநல்கும் ராசனே
நீச ராசனாய் இங்கே நின்ற தேதையா
10\. விண்முடி எனக்கு (சுவாமி) தரவித்தகர் சிரசில்
முண் முடி பூண்டீர் ஐயா முழுமனதோடே
11\. அசடனாகிய (சுவாமி) எந்தன் ஆணவம் நீங்க
நிசமுடன் சூழ்ந்திட இந்த நிலையிலிருக்கின்றீர்
12\. நல்ல தகப்பனே (சுவாமி) உயிர் உள்ள மட்டுக்கும்
செல்வநாயகா உனை சினேகிப்பேனையா

## கிறீஸ்துவின் பாடுகளைக் குறித்துப் பிரலாப புலம்பல்

1\. ஓ! தயாபரா, ஓ! தயாபரா, ஓ! தயாபரா
நீர் எங்களுக்காய் சாவடைந்தீர்
2\. தயவாய் பூங்காவிலே துயரே மிகுந்தாய்
தரையானதில் தரையானதில்
தரையானதி லுதிர வேர்வைதான் சொரிந்ததோ
3\. பெரும் காதகனாகிய ஸ்கரியோத்து பாதகன்
உமைக் கட்டியே உமைக் கட்டியே
உமைக் கட்டியே முத்தங்கொடுத்து காட்டிவிட்டானே
4\. அங்கே யுரிமை சீஷரும் உமை ஒன்றியாய் விட்டு
பிரிந்தோடினார் பிரிந்தோடினார்
பிரிந்தோடினார் யூதர்களும் நாடிபிடித்தனர்
5\. கைவடி விறுக்கியே அன்னாஸ் கசடன் வீட்டிலே
எங்கள் கர்த்தனே எங்கள் கர்த்தனே
எங்கள் கர்த்தனே ஓர்பாவி யுமதுகன்னத்திலறைந்தான்
6\. கைப்பாசன் வீட்டிலும் கனபாடு படுத்தினர்
ஐயோ கடினமாய் ஐயோ கடினமாய்
ஐயோ கடினமாய் பயந்து தருவித்தனரே

7., உம்மையே பிலாத்துவும் ஏரோதிடமனுப்ப
அருள் எந்தையே அருள் எந்தையே
அருள் எந்தையே ஓர் கந்தை யுடுத்தி பின்னும்

8. பின்னுமதி பிலாத்தன் வீட்டிலே
தூணில் பின்னமாய் தூணில் பின்னமாய்
தூணில் பின்னமாய் கட்டியடித்திட பெய்ந்ததே சதைகள்

9. முள்ளால் முடிதரித்து ஒரு மூங்கிலாலடித்து
முழந்தாளிலே முழந்தாளிலே
முழந்தாளிலே இருந்து வணங்கி மொழிந்திகழ்ந்தனரே

10. இக்கோலமாகவே உமைக்கொண்டு முன்வர
யூதர் குருசிலே யூதர் குருசிலே
யூதர் குருசிலே யறைந்துகொல்ல கூவி முழங்கினர்

11. பெரும் வஞ்சக பிலாத்து மாறுட்ட மாகவே
யூதர்க்கஞ்சியே யூதர்க்கஞ்சியே
யூதர்க்கஞ்சியே கைகழுவியும்மை அவர்களுக்களித்தாரே

12. கனசிலுவை சுமத்தியே கொலைமலைக்கு நடத்தியே
வழி சென்றிட வழி சென்றிட
வழி சென்றிட வெரோணிக்கென்பாள் திருமுகந்துடைக்க

13. சிலர் அழுது தொடரவும் நீர் அயர்ந்து விழுகவும்
உம தன்னையார் உம தன்னையார்
உம தன்னையார் எதிர்வரக் கண்டழுது தியங்கவும்

14. கொல்கத்தா மீதிலே எம்கர்த்தாவே யுமையே
பெருங் கூரிய பெருங் கூரிய
பெருங் கூரிய மூன்றாணி கொண்டு குருசி லறைந்தனர்

15. நீர் சித்தமாகியே சிரஞ்சாய்ந்து இறந்திட
ஒரு சேவகன் ஒரு சேவகன்
ஒரு சேவகன் விலாவை குத்தித் திறந்துவிட்டானே

16. உம்காயமே கொண்டுதன் கண்ணீரால் கழுவி
செல்வ நாயகி செல்வ நாயகி
செல்வ நாயகி கொடுக்க நல்சீஷர் நலிந்தடக்கினரே.

---



## தேவமாதாவின் புலம்பல்

பூதலமும் வானுலகும் வானுலகும்
புகழ் விளங்க வந்துதித்த வந்துதித்த
மாதயவு நிறைந்தருளும் நிறைந்தருளும்
வல்லசரு வேஸ்வரனே சர்வேஸ்வரனே
அம்பரனே யும்பர்கோனே யும்பர்கோனே
ஆறுலக்ஷண முள்ளானே லக்ஷணமுள்ளானே
நம்பினவர்க் கருள்செய்வோனே அருள் செய்வோனே
ஞானசரு வேஸ்வரனே சர்வேஸ்வரனே
மனமகிழ்ந்து தூதன்வந்து தூதன்வந்து
மங்களவார்த் தைபகர்ந்து வார்த்தை பகர்ந்து
தனதுடனே எனது கர்ப்பம் எனது கர்ப்பம்
தனி லமைந்த என் பாலகனே என் பாலகனே
ஆதியேவை தீதகல தீதகல
ஆவியுரு வாகவந்து வாகவந்து
மகிதலங்கள் புகழ நின்ற புகழநின்ற
மாசில்லாத பாலகனே என் பாலகனே
பெத்திலேகேம் பட்டணத்தில் பட்டணத்தில்
வெல்லைமலை புல்லணையில் புல்லணையில்
நற்றவமே செய்து பெற்ற செய்து பெற்ற
நாதனை நான் காண்பதெப்போ நான் காண்பதெப்போ
தீர்க்கமுடன் மூன்று ராசர் மூன்று ராசர்
தெண்டனிட நின்றவேதா நின்றவேதா
நாற்பதா நாள் சிமியோன்முனி சிமியோன்முனி
நவின்ற வார்த்தை பலித்ததையோ பலித்ததையோ
பனிரெண்டாண்டில் பரமஞானம் பரமஞானம்
பகர்ந்த எந்தன் பாலகனே பாலகனே
தன்மைபெறு எஜிப்து தேசம் எஜிப்து தேசம்
தனிலெழுந்த பாலகனே என்பாலகனே
அந்தமண பந்தலிலே பந்தலிலே
அமிர்தரசம் செய்தநாதா செய்தநாதா
இனிமையுள்ள வுமதுசொல்லை யுமதுசொல்லை
இச்சையுடன் நான் கேட்பதெப்போ கேட்பதெப்போ
தரித்திரர்கள் கூன்குருடர் கூன்குருடர்
சகலவினை அகற்றும்வேதா அகற்றும்வேதா
ஐந்தப்பங்கொண் டையாயிரம் ஐயாயிரம்பேர்க்
களித்த எந்தன் பாலகனே என்பாலகனே
எண்ணரிய புதுமைசெய்து புதுமைசெய்து
இருகில மீடேறுதற்கு ஈடேறுதற்கு

மரித்தலாநர்க் குயிர்கொடுத்த உயிர்கொடுத்த
மகனேயுன்னை நான் காண்பதெப்போ காண்பதெப்போ
ஜெகதலத்தோர் கீழ்ப்படிய கீழ்ப்படிய
சீஷர்பாதம் தான்கழுவி தான்கழுவி
விண்ணவனே என்னிடத்தில் என்னிடத்தில்
விடைபெறவே நின்றபாலா நின்றபாலா
அகமகிழ்ந்து நற்கருணை நற்கருணை
அளித்த எந்தன் பாலகனே பாலகனே
காவில்முழந் தாளில்நின்று தாளில்நின்று
கனத்தஜெபஞ் செய்யும்போது செய்யும்போது
வார்சவுக்கும் சங்கிலியால் சங்கிலியால்
மாறிமாறி அடித்தனரோ அடித்தனரோ
கோபமுள்ள யூதர்வந்து யூதர்வந்து
கொடியவாதை செய்திட்டாரோ செய்திட்டாரோ
கள்ளனைப்போல் தூணில்கட்டி தூணில்கட்டி
கசைப்பிரம்பா லடித்ததினால் அடித்ததினால்
நேர்மையுள்ள மேனியெல்லாம் மேனியெல்லாம்
நிறங்குலைந்து கன்றினதோ கன்றினதோ
பாங்குயர்ந்த தாடிதன்னை தாடிதன்னை
பதித்திழுத்து நகைத்திட்டாரோ நகைத்திட்டாரோ
துள்ளிடவும் தசைபிளந்து தசைபிளந்து
துண்டுதுண்டாய் விழுந்ததுவோ விழுந்ததுவோ
நீசர்வாயா லுமிழ்ந்தநீரால் உமிழ்ந்தநீரால்
நின்றமுகம் வாடினதோ வாடினதோ
தூஷணமும் பரிகாசமும் பரிகாசமும்
சொல்லரிய வேதனையும் வேதனையம்
வெள்ளையரை சட்டைதன்னை சட்டைதன்னை
மெய்யினிலே போர்த்திட்டாரோ போர்த்திட்டாரோ
தள்ளொண்ணாத பித்தனென்று பித்தனென்று
சகதிமண்ணு லெறிந்திட்டாரோ எறிந்திட்டாரோ
உண்மையுள்ள உடல்முழுதும் உடல்முழுதும்
உதிரம் நீராய் வடிந்ததுவோ வடிந்ததுவோ
முள்முடியை சிரசில் வைத்து சிரசில் வைத்து
மூங்கில்கொம்பால் அடித்ததினால் அடித்ததினால்
வருத்தமுடன் இறடிவிழ இறடிவிழ
மனந்தளர்ந்து திடுக்கிட்டீரோ திடுக்கிட்டீரோ
திருக்குருசைப் புயத்திலேத்தி புயத்திலேத்தி
தீவிரமாய் நடத்திட்டாரோ நடத்திட்டாரோ
தலைகுனிந்து விழிகள்சோர விழிகள்சோர
சடம்நடுங்கி மரித்திட்டீரோ மரித்திட்டீரோ



சிலுவைமரந் தனில்கிடத்தி தனில்கிடத்தி
திருக்கரங்கா லாணிதைத்து ஆணிதைத்து
வானாதியே என்மகனே என்மகனே
மனமுருகி மடிந்திட்டீரோ மடிந்திட்டீரோ
ஆனாஸ்கைபாஸ் பிலாத்தெரோதை பிலாத்தெரோதை
அநியாய தீர்வைக்குள்ளானீர் தீர்வைக்குள்ளானீர்
உயிர்பிரிந்த என்மகனே என்மகனே
உயிருடனே நான்காண்பதெப்போ நான்காண்பதெப்போ
வலதுபுறஞ் சோரனுக்கே சோரனுக்கே
வரமளித்து மரித்திட்டீரோ மரித்திட்டீரோ
கையதினால் பிடித்திழுத்து பிடித்திழுத்து
காயமெங்கும் செய்திட்டாரோ செய்திட்டாரோ
துயரகல ஜூவானிதன்னை ஜூவானிதன்னை
சுதனெனவே கையளித்து கையளித்து
தையலில்லா சட்டைதன்னை சட்டைதன்னை
சரீரமதி லுரிந்திட்டாரோ உரிந்திட்டாரோ
அதிகசப்பு காடிநீரை காடிநீரை
அருந்தெனவே கொடுத்திட்டாரே கொடுத்திட்டாரே
மதியில்லாத யூதர்கூடி யூதர்கூடி
வசைகள்பேசி கொடுமைசெய்து கொடுமைசெய்து
மண்ணதிர விண்ணதிர விண்ணதிர
மதிபருதி ஒளிமழுங்க ஒளிமழுங்க
இயல்புரிந்து குருசில்நின்று குருசில்நின்று
எழுவார்த்தை தான்பகர்ந்தீர் தான்பகர்ந்தீர்
கண்மறைய வாயுலர வாயுலர
கைகால்சோர வுடல்குளிர வுடல்குளிர
திண்ணமுள்ள வுயிரினங்கள் உயிரினங்கள்
திடுக்கிடவே உயிர்விடுத்தீர் உயிர்விடுத்தீர்
மடிந்தவுடன் திருவிலாவில் திருவிலாவில்
வல்லயத்தால் குத்தினாரே குத்தினாரே
மண்புகழும் வடிவுமாற வடிவுமாற
மடிந்திட்டீரோ என்மகனே என்மகனே
விள்ளரிய மலைமேல்நின்று மலைமேல்நின்று
விழுந்தவர்கள் மேனியைப்போல் மேனியைப்போல்
குடங்கவிழ்ந்த நீரதுபோல் நீரதுபோல்
கொப்பளித்து வடிந்ததையோ வடிந்ததையோ
தந்தைசரு வேஸ்வரனே சர்வேஸ்வரனே
சருவலோக நாயகனே நாயகனே
எவ்வளவுங் காயமில்லா காயமில்லா
இவ்வுடம்பில் கண்டேனையோ கண்டேனையோ

செக்கிவிட்ட எள்ளுபோல எள்ளுபோல
தேகம்நொந்து உயிர்மெலிந்து உயிர்மெலிந்து
இந்தகோலங் காண்பதற்கோ காண்பதற்கோ
வீன்றெடுத்தேன் என்மகனே என்மகனே
கஸ்திமிக வாகுதெந்தன் ஆகுதெந்தன்
கண்மணியே என்னசெய்வேன் என்னசெய்வேன்

---

## மரணத்தைத் தியானித்து

## அர்ச். மரியாயை மன்றாடும் லாவணி.

எனதுடமுடிவை அடியான் நினைக்க வரந்தாரும்
மாமரியே மரண நேர முதவிசெய்ய வாரும்
உலகாஸ்தி பாஸ்திசுக போகமகிமை யெல்லாம்
உடல்நாற்ற மெடுத்துப்பலர் நாடிடாத உடலாகுமே
கொடுபே யொருபுறம் நோயொருபுறம் பெண்டிர்
என், தாயொருபுறம் சேயொருபுறம் சஞ்சலமே
நல்விருந்து தந்தவர் மருந்து கொண்டு வருவாரே
உன், அருமைமைந்தனுக்கென்ன சொல்லுகிறாய் என்பாரே
எனை எடுக்கப்பிடிக்க நான் படுக்கையில் கிடக்கிறகாலம்
பின், அடுத்துவருவதை அறிந்து பயப்படாத கோலம்
சர்க்கரை கசக்குந் தண்ணீரும் பாலும நஞ்சாகும்
அச்சமயம் வாழ்ந்தநாள் கனவுபோன்றதென தடுமாறுமே
ஒரு, மட்டுமிதமிலா கஷ்டம் ஏக்கம் பயநேரம்
இதில், இஷ்டமன வல்லய ஜெபம் ஜெபிக்கலாமோ
புவி, சகலமானதையும் சகலரையும் பிரிவேனோ
வரும், பகலிரவை இனிபார்த்திடாமல் மறைவேன்நானே
நான், செத்தபின்பு தனிதீர்வைக்கே வருவேனே
அது, மெத்த வுத்த தீர்வையாக செய்வாய்தானே
ஓ, மாயமான இந்த வாழ்வு புகையைப்போலாமோ
செல்வ, நாயகி யுனது பாதங் கெதியென நம்பினேனே.

---



உலகரக்ஷகராகிய சேசுகிறீஸ்துநாதரின் திருவடிகமலங்களிற்
சாற்றிய

## பெருமானேசப் பநுவல்.

வெண்பா.

பூவகத்தி லாதிமிறைப் போக்க வொருமரியின்
மாவகத்தில் வந்த மறைமுதலின்—நாவகத்தில்
பேசத் துணையாம் பெருமானே சப்பநுவல்
நேசக் கழலே நெறி.

வினா.

விண்ணோடகில சராசரமும் விதித்தோ ருரையால் விரித்துரைப்ப
ஒண்ணாக் கருணையுடன் புரகரும் ஒருவா விருவில் பாஞ்சுடரே
மண்ணோ ருருவாய் மாசணுகா மரிபால் வெல்லை மாடடையில்
எண்ணா நவனீர் பிறந்ததென்னோ எங்கும் நிறைந்தபெருமானே.

விடை.

பொருள்பூபெண் ணாசையெனும் புணரியிடை யாழ்ந்தலறும்
வெருள்கொண்ட பாவிகளை மீட்கசிறு குடிவாயில்
தருமகன்னி மாமரியாற் றாழ்ச்சியெனும் புண்ணியத்தைப்
பெருமானுங் காட்டவல்லோ பிறந்ததுமா நேசமதே!

வினா.

சேடாரிமையோர் அணியணியாய்ச் செறிந்தே பொற்றாட் பணி
[பணிப்பக்
கோடா தெல்லாம் மனுக்களுக்குங் குயிற்றும் நீதி யதிபதியே
கேடா ரானஸ் கைப்பாஸ் முன் இளவ மௌன முடன்கயவ
ரீடாய்நிறுத்த விசைந்ததென்னோ எங்கும்நிறைந்த பெருமானே.

விடை.

ஆங்காரங் கோபமுட னைந்துதலை பாதகத்தில்
நீங்காத மாகொடிய நிட்டையிலா துட்டருக்கு
பாங்காயப் பொறுமையதை படிப்பவன்றால் கைப்பாஸ்முன்
நீங்காத மோனமுடன் நின்றதுமா நேசமதே!

வினா.

பொல்லாப் பாரோ னுளம்விதிர்ப்ப புரந்தாயிசரேல் தமைவானின்
நில்லா வென்றும் நிறுத்தியொன்னார் நிலைசாய்ந்தோட சயமளித்த
வல்லாயும்மைக் கற்றூணில் வளைந்தே கசைவார் கொண்டிறுக்க
மில்லா ரடிக்கப்பொறுத்ததென்னோ எங்கும் நிறைந்த பெருமானே!

விடை.

இம்மேனி சாஸ்வதமென் றெண்ணியிழைத் தீங்காற்றி
அம்மேனி கொள்ளிமையோ ரார்த்த சபை யிற்குலவ
எம்மேனிக் கழகருரு மெந்தைபிரான் கற்றூணிற்
செம்மேனி குருதிநிலஞ் சிந்தியதும் நேசமதே!

வினா.

நகல்செய் மணியார் மகுடமணி நலஞ்சே ராசர்கோமானே
புகல்செய் நெறியா யருட்செங்கோற் புரியு மொருவா புங்கவனே
பகல்செய் சிரமுண் முடிசூடி பழித்தேகையில் மூங்கிற்றந்து
இகல்செய்திட நீர்பொறுத்ததென்னோ எங்கும் நிறைந்த பெருமானே

விடை.

செடிதருமுச் சத்துருவாய் சிக்கிபகடெனவலைந்து
கடிதருமாரண மோதி கைகூப்பி முடிவணங்கா
மடியறமுண் முடிபுனைந்து மறைக்க வொளிர் முகங்குருதி
வடியபரன் நின்றதுவும் வைத்த பெரு நேசமதே!

வினா.

வசையார் மாந்த ருய்யசீனா வரைமே விரைந்து நெறியளித்து
அசைபாதெவர்க்குந் தனித்தீர்வை யளிக்குங் கருணைகரப் பொருளே
திசையாள் போஞ்சு பிலாத்தன் கொடுந்தீர்வைத் தந்தொன்னார்கைதா
இசையாதொன்று மிருந்ததென்னோ எங்கும் நிறைந்த பெருமானே

விடை.

நீதியில்லா மன்னவராய் நெறியில்லா பொய்க்குருவாய்
ஆதிசத்ய மறைக்கிடர்செய் அநீதரெனும் பட்டமரப்
பூதியர்கள் தீர்வையினிற் புக்காது தாம்பிணையாய்
போதிப்ப கொலைத்தீர்வைப் பூண்டதுமா நேசமதே!

வினா.

இமையா புரஞ்சிங் காதனமாம் இகமே திருத்தாட் படியாய்சொல்
அமையா நரர்பா லச்சுமையை அகற்றிசுவர்க்கந் தருமுதலே
திமையார்யூதர் சுனக்குருசைத் திருத்தோட் சுமத்தியடித் திழுக்க
எமையாள் பரனீர் நடந்ததென்னோ எங்கும் நிறைந்த பெருமானே

விடை

பார்சிலுவைத் தனைசகித்துப் பகரரிய மோக்கபதிக்
கோர்சிலுவை யடையாள மில்லாது வீவர்தமைச்
சார் சிலுவைத் தனையகற்றி தற்காக்க வல்லபிரான்
வார் சிலுவைச் சுமந்ததுவும் வைத்த பெரு நேசமதே!

வினா.

ரம் நீதிதெளி வெனு மூவிரலாற் றிருபுவனந் தாங்கும்
பாரம்பழுத்த வருள்வடிவே வளமா ரமலனே சிலுவைப்
பாரம்பொறுக்கா மும்முறைமெய்ப் பதைக்கவீழ்ந்தெல்லார் நடுவி
ரமுடனீர்நடந்த தென்னோ? எங்கும் நிறைந்தபெருமானே.

விடை.

பண்டுதித்த மறைமார்க்கம் பற்றிச்செலு முத்தர்தமைக்
கண்டெதிர்க் குங்கயவ ரெலாங் கடுநரகிற் பாதபத்தின்
வண்டுதித்த கனிபழுத்து வீழ்வதைப்போல் வன்னிகடல்
விண்டுதிர்வா ரெனப்புரக்க வீழ்ந்ததுமா நேசமதே!

வினா.

விந்தையுடன் றீமொழியினிலோர் மின்னுடனேமீள் மகினேய
கந்தையுள்ளாருமை குருசிலறைந்தேக விழ்ந்து முனைமடக்கி
நிந்தையுடனீர் கள்வர்நடு நிறுத்தமாவ கோரமுடன்
எந்தைநீர்தான்பொறுத்த தென்னோஎங்கும்நிறைந்த பெருமானே.

விடை.

இறைமிகுத்தப் பெரும்பாவி யேனும் பணிந்திரந்திடுங்கால்
குறைதவிர்த்துக் கொண்டணைப்பக் குளிர்க்கமலக் கரம்விரித்து
நிறைமிகுந்தக் கள்வர்நடுமிகு நிந்தையெழக்குருசில்
அறையபரன் சகித்ததுதா னார்ந்தபெரு நேசமதே!

வினா.

தாங்கா தாகமுடனடியார் தயங்கமோ யீசன்கோலால்
பாங்காயடிக்க பொறுப்பிலயம் பரிவாயளித்த பராபரனே
நீங்காவன் பாற்றுகமென நீர்பிச்சுங் காடிதர
வீங்காதரவில் சுவைத்ததென்னோ எங்கும் நிறைந்த பெருமானே.

விடை.

நவைதரும் பேயினமொடுங்க நரரிழைக்கு மாற்றருந்தீங்
கவைதீர்த்துக் காப்பதுவே யரியபெருந் தாகமென
இவையறியார் காடிபிச்சு மீயபடி வாழ்விதென
சுவைத்ததுதா னெந்தைபரன் சொல்லருமா நேசமதே!

வினா.

சாவா தேனோக் கெலியாசைத் தயவாய் மீட்டுச் செந்தணலில்
வால ரைகாத் தாண்டவனே மூவா முதலோனே சர்வ
வா தரனே யற்புதனே தேவே பிறப்பிறப் பில்லானே
சுவார் பரநீர் மரித்ததென்னோ எங்கும் நிறைந்த பெருமானே.

விடை.

ஆகமஞ்சொல் நிறைவேற்றி யருந்திருவே யுரைபகர்ந்து
தேகமே யேடென வாணி தீட்டுங் கோற் செந்நீர்மை
யாக புதுமன்றே வரைந்து அளித்து மறுபிறவிதந்த
ஏகபரன் மரித்தநுவும் எழுந்தபெரு நேசமதே!

தனியன்.

காற்றினாடில வம்பஞ்செனபல கவலையாலலைந் தேனவொழ்வெனும்
சேற்றிலாழ்ந்துகொல் பாவவிமோசனம் செய்யாவன்படிற்றேனுள்
[மல்குமால்
மாற்பியென்று மழியாப்போனந்தம் மாந்தபண்ணவரோடு வியனுல
கேற்றிடதயைக் கொண்டதாண்மறவேன் என்னைநாடியவென்
[னுயிர் நாதனே

ஓடிகானலைநீரென மானினம் உன்னிபோய்ந்த வாரத்தமும் வாழ்மனை
நாடிசாஸ்வத மென்றுழைத்தேனல்லால் நற்கதிபெற நான்
[முயன்றேனிலை
வாடிகட்டுண்டகர்த்தபம்போனின்றுமாபாவியெந்தன் கட்டவிழ்த்
[தேற்றவா
நீடிலாதயைக்கொண்ட தாண்மறவேன் என்னைநாடியவென்னுயிர்
[நாதனே

தொழுகிலேன் கணப்போதுங் கனவினுந்தோணி லேன்வைய
[வாழ்வவலமென
தழுவிலேன் முத்திமார்க்கஞ்சொல் மாமறைசார்ந்திலேன் சற்சன
[ருற விற்கொடுமல்
கழுமலேனிழை மாசெலாஞ்செந்நீராற் கழுவியகருணாகரமெய்யனே
இழுதையே னுங்கொல் செய்யுங் கைமாறுண்டோ என்னை நாடிய
[வென்னுயிர் நாதனே

வேறு.

மூண்டெழுவன்னி நரகிடையாழ்த்த முறிதற்செய்யலகையின் வாயிற்
பூண்டமாகொடிய வாந்தையுண்டுழலும் புள்ளுநவனாகிய வென்னை
மீண்டாளிமனுவாய் உதித்துசொல்லரிய வேதனையுற்றனையையோ
ஆண்டவா எங்கள்சேசுநாயகனே அடியேனுன்பத மடைக்கலமே.



## * திவ்ய நற்கருணைத் திருமருந்தின்பேரில்.

இராகம் எதுகுலகாம்போதி; தாளம் ஆதி.

அருமருந்தொன்றுண்டு அவையின்னதென்று கண்டு
அருந்துவோருக்கே நன்று ஆத்தும சுகமுண்டு
சருவ முனிவரெல்லாம் சாக்ஷிசொல்லு மருந்து
வாருஞ் சகோதரரே வாருமதைப் புசிக்க (அரு)

பூலோக முண்டுசெய்த பூரணமாமருந்து
புண்ணிய நோயனிடம் பூரித்தெழுமருந்து
சாலோகப் பதவியைத் தந்தாண்டருள் மருந்து
சலப்பிரளயத்தாலே தண்டித்தமாமருந்து (அரு)

மோயீசனுக்கு வேதம் மொழிந்த திருமருந்து
மொழியு மிசரேலரை மீட்டுக்கொண்டமருந்து
பாயும் யோசுவனுக்கும் படைக்களமாமருந்து
பக்தர் ஜோப்பு தோபியாஸ் பாங்காய் நின்றமருந்து (அரு)

ஆனால் சாமுவேல் தன்னையளிக்கச் செய்த
ஆக்ரம பிலித்தியர் அழியப் புரிமருந்து
கோனான் தாவீதினாலே கொலியாத்தை கொல்மருந்து
கூறுஞ் சாலமோனோடுகூட நின்றமருந்து (அரு)

அக்கினி ரதமெலியாஸ் அணுகச் செய்தமருந்து
அடங்கா இசரேலரை அழிசாபஞ் சொல்மருந்து
திக்குத் தப்பினோர் தம்மை சேர்க்க வாக்கமருந்து
தீர்க்க னிசையாஸ்முன்பு செப்பிவந்தமருந்து (அரு)

முனிசூசை மரியிடம் முளைத்துவந்த மருந்து
முன்னான்கு வயதிலே முதுமொழி சொல்மருந்து
தனித்து நாற்பதுநாளாய்த் தவசு செய்தமருந்து
தனக்கீராறு சீடரைத் தரையிற் கொண்டமருந்து (அரு)

புனலை ரசமாகப் புரிந்த திருமருந்து
புதைத்த லாசருக்குயிர் புகழ்த் தந்தமருந்து
அநேக வற்புதங்களை அடுத்தோர்க்குச் செய்மருந்து
அன்பருக் கின்றுமென்றும் அரியவை செய்மருந்து (அரு)

கண்ணில்லா பேர்களுக்கு காக்ஷி தருமருந்து
கண்ணிமை கெடாதோர்க்கு காவலா மாமருந்து
புண்ணியவான்களுக்குப் பூமுடி யாமருந்து
பொய்மத மழியவே போற்றுங் கனமருந்து (அரு)

---

* இராயபுரம் வித்துவான்: ஸ்ரீமான் செய்யப்பமுதலியாரால் இயற்றப்பட்டது.

பேய்பில்லி சூன்யந்தீர பிரியமானமருந்து
பேசாத ஊமைபேச பெட்பு நிறைமருந்து
சேயில்லா தோர்களுக்கு சிறந்த தவமருந்து
செப்பிடு வித்தையெல்லாம் திகைத்தோடச் செய்மருந்து (அரு)

உரோக பித்தவாதத்தை நொடிக்குள் தீர்க்குமருந்து
ஊர்விஷ ஜெந்துக்கடி யோடச் செய்யுமருந்து
கோர யூதர் கையினால் குருசில் மாண்டமருந்து
குருதிவெள்ளம் புரள கொடிபோ லானமருந்து (அரு)

வளர்த் தெடுத்த தாய்மடி வளர்க்தப்பட்ட மருந்து
மரிமத்லேனாளின் மனதி னிறைமருந்து
நில கல்லறையதனில் நீட்டப்பட்ட மருந்து
நேசக் கொடியோ டுயிர்த் தெழுந்து வந்தமருந்து (அரு)

அப்பம் ரசத்துக்குள்ளே அமர்ந் திருக்கு மருந்து
ஆகும் பாவசங்கீர்த்தன அதன்பல னிம்மருந்து
இப்போ தெழுந்தருளி யிருக்குங் கனமருந்து
எவரும் முடிவணங்கி ஏத்தித் தொழுமருந்து (அரு)

சந்தத வாழ்வுக்கேற்ற சங்கை தருமருந்து
தாச ரிதயத்திலே தங்கி யெழுமருந்து
இந்த மருந்தின் பேர்க்கு இணையில்லை இணையில்லை
இந்த மருந்தின் பேரோ ஏசு வெனுமருந்து (அரு)

## வாழி.

இராகம். குருத் துயரால் புலம்பல்.

வாழியே வாழி குருரிஷி மார்களும் வாழி—புவியில்
சேனைகள் யாவும் சேசுவின் திருவடி வாழி
அர்ச். பாப்பு குருவுமாதி சிரேஷ்டருமே—தேவ
சற்குருமாரும் சத்தியத் தலைவரும் வாழி
அன்புள்ள சீஷர் பனிரெண் டப்போஸ்தலர்மாரும்—பரனும்
இப்பவமாய் மோக்ஷவாசிக ளெல்லோரும் வாழி
மாதமும் மாரிபெய்து வளர்ப்பயிரோங்கி—நாளும்
நாடுமே செழித்து பெருகியே நலமுடன் வாழி
பாடியே படிப்போர் புலம்பலை பத்தியாய்க் கேட்போர்—சகல
சத்திய வேத திருச்சபை தவறாமல் வாழி
எத்திசை கந்தம் களித்திட இன்பர்கள் வாழி—அவர்கள்
உத்தம பந்து ஜனங்களும் உகந்துமே வாழி.

முற்றிற்று.

97227

T. [illegible] M. PRESS, PRINTERS, MADRAS

# புதிய வெளியீடுகள்

## நரியம்மா விடுதி நங்கை

விசித்திரமான அறைகளும் விசித்திரமான நபர்களும், உள்ள நரியம்மா விடுதியில் சஞ்சரிக்கும் விபரம் தெரியாப் பெண்; அவளுக்குப் புது வாழ்வு தர பலவித மர்மங்களில் புகுந்து புறப்படும் துப்பறியும் காதலன், கடலில் விழுந்தவளும் காரில் பறந்தவளும்; திருடிக்குத் திவான் பகதூர் ஜாமீன், கள்ளிக்கு கப்பல்காரர்கள் துணை; நங்கையின் நடுக்கம், வேங்கையின் நாட்டம்;—முதலான விசித்திரச் சம்பவங்கள் நிறைந்த '***மேதாவி***' யின் சுவையான மர்ம நாவல்

விலை, ரூ: 1—50.

## நடுநிசி நாயகி

காட்டுப் பிரக்கத்துக் கள்ளனைக் கண்டு பிடிக்க வந்து மலைப்பாக்கத்து மங்கையைக் கண்டு மருளும் துப்பறியும் தம்பி; பேராசிரியர், தா பி. குண்டுப்பிள்ளையின் பெரியபுராணம்; துப்பறிபவன் என்ற சொல்லைக் கேட்டதுமே துள்ளி மறையும் தோகை மயிலாள்; ஏவலாளுக்குத் தெரியாத எஜமானன்; அடிக்கடி நரம்பு வியாதியால் அவஸ்தைப்படும் மணிமுத்து சங்கரன் செட்டியாரின் அலறல்; விசித்திர மஹாலை விலைக்கு வாங்கும் விநோத ஆசாமி; தங்கமலையின் தலை மறைவு, தையலுக்கு இரவுத் துடிப்பு; பைசாச புரியில் பிசாசு நடமாட்டம்—இத்தனைக்கும் நடு நிசி நாயகிக்கும் உள்ள சம்பந்தமென்ன ?

'***மேதாவி***' யின் சுவையான மர்மநாவல் விலை, ரூ: 1—50.

**பிரேமா பிரசுரம் : : சென்னை-24**

PREMA ART PRINTERS, MADRAS-24